13-4-1952 M.V.M M


# போர்வாள்

வாள் 5 வீச்சு 28

12-4-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

ஈர. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# பலே ஜோர்! பலே ஜோர்!

[பாண்டியன்]

"தேவை! தேவை! அவசரமாகத் தேவை" என்று கூவிக்கொண்டே வந்தான் சேரன், என் நண்பன்.

நான் கேட்டேன்: "என்னப்பா தேவை உனக்கு அவ்வளவு அவசரமாக!"

"ஒரு காவி வேட்டி!"

"காவி வேட்டியா?"

"ஆமாம்! அதோடு ஒரு கமண்டலம்!"

"கமண்டலமா?"

"ஆமாம் பாண்டியா! ஒரு காவி வேட்டி, ஒரு கமண்டலம், ஒரு பொய்த்தாடி, ஒரு ஜடாமுடி, ஒரு ஒட்டுமீசை, ஒரு உத்திராட்சமாலை, ஒரு திருப்பாத குறடு, இந்த ஏழு பொருள்களும் எனக்கு மிக அவசரமாகத் தேவை! இப்போதே தேவை! உடனே தேவை! இந்த விநாடியே தேவை!"

"உனக்கெதற்கு சேரா இந்தப் பொருள்களெல்லாம்? யாராவது சந்நியாசியாகப் போகிறவர்களுக்கல்லவா இவைகளெல்லாம் வேண்டியிருக்கும்? நீ என்ன செய்யப் போகிறாய் இவைகளை வைத்துக்கொண்டு?"

"சந்நியாசியாக மாறத்தான் இவைகளைக் கேட்கிறேன். நான் துறவியாகப் போகிறேன்! துறவியாக மாறி என் அப்பன் திருநீலகண்டனின் திருப்புகழ் பாடப்போகிறேன். ஓய்வாக இருந்து மன அமைதியை நாடப் போகிறேன். உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு, உலகத்தைப் படைத்தவனைத் தேடப் போகிறேன். சத்து சித்து ஆநந்தம் இவற்றின் உட்பொருளை உணரப் போகிறேன்."

"உட்பொருளை உணர்வது இருக்கட்டுமப்பா பிறகு! உனக்கு ஏன் இந்த உதவாக்கரைப் பைத்தியம் ஏற்பட்டது? அதைச் சொல்லு முதலில்!"

"எது உதவாக்கரைப் பைத்தியம்? துறவியாக மாறுவதா? சந்நியாச கோலம் பூண்பதா? ஆண்டவன் திருப்புகழ் பாடுவதா?"

"ஆமாம்! அதைத்தான் சொல்கிறேன்! ஊரை ஏமாற்ற எண்ணும் உலுத்தர்கள், அகப்பட்டதைச் சுருட்ட நினைக்கும் எத்தர்கள், மக்களை மடமையில் ஆழ்த்தும் மதிகேடர்கள், இப்படிப்பட்டவர்கள் அல்லவா துறவி வேடம் போடுவார்கள்! உனக்கு ஏனப்பா அந்த வேடம்?"

"ஏன் என்று கேட்கிறாயா? அப்படிக் கேள், சொல்கிறேன்! நான் இந்த ஊரின் முனிசிபல் கமிஷனராக வேண்டும்!"

"அதற்கு?"

"அதற்காகத்தான் துறவி வேடம் பூணப் போகிறேன்."

"உரக்கச் சொல்லிவிடாதே சேரா! யாராவது கேட்டுவிட்டுக் கைகொட்டிச் சிரிக்கப் போகிறார்கள்! முனிசிபல் கமிஷனராவதற்கு வழி துறவி வேடம் போடுவதா? ஏன்! உன் சித்தத்தில் ஏதாவது சிதைவு ஏற்பட்டுவிட்டதோ? பித்தம் முற்றிவிட்டதோ?"

"அதெல்லாமில்லை பாண்டியா! என் சித்தம் சரியான நிலையில்தான் இருக்கிறது! நான் என்ன சொல்லுகிறேன் என்பதைத் தெரிந்தேதான் சொல்லுகிறேன்! எனக்கு முனிசிபல் கமிஷனராக வரவேண்டுமென்று ஆசை! அதற்காகத்தான் துறவி வேடம் போட இருக்கிறேன்! பேசிக்கொண்டிருக்க நேரமில்லை

பாண்டியா—சீக்கிரமாக காவி, கமண்டலம், இவற்றைக் கொண்டு வா.'

"முனிசிபல் கமிஷனராக வர வேண்டுமென்று ஆசை! அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு வழி, துறவிக் கோலம் போடுவது! நடக்கிற காரியமா இது? பலன் தரக்கூடிய போக்கா?"

"ஏன் பலன்தராது? துறவி வேடம் போட்ட ஒரே காரணத்தால் ஒருவர் பிரதம மந்திரியாக வந்திருக்கிறபோது, அதே வேடம் போடுகிற நான், கேவலம் முனிசிபல் கமிஷனராகத் தானா வரமுடியாது? காலத்தை வளர்த்தாதே பாண்டியா! எடு ஜடா முடியை! கொடு இப்படி!"

சேரன், எதற்காக ஜடாமுடியையும் காவி கமண்டலத்தையும் நாடினான் என்பது எனக்கு இப்போதுதான் புரியலாயிற்று. அரசியல் வாழ்வே வேண்டாம் என்று கூறிவிட்டு, இனி ஏகாந்த வாழ்வே எனக்குப் பிரியமானது என்று பேசிவிட்டு, பஜகோவிந்தத்தின் பெருமையை விளக்குவதே இனி என் வேலை என்று சொல்லிவிட்டு, பகவான் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருப்பதே எனக்கு மகிழ்ச்சியான காரியம் என்று வெளிப்படையாக அறிவித்து விட்டு, துறவிக்கோலம் பூண்டிருந்த ஆச்சாரியார், திடீரென்று, சென்ற வாரம் அரசியல் வாழ்விலே குதித்து, இந்த வாரம், பிரதம மந்திரியாக வந்திருக்கிறாரே, அந்தப் பூணாரம் பூண்ட புதுமையைத்தான் சேரன், இப்படி, குத்திக் காட்டியிருக்கிறான்.

நியாயம்தானே சேரன் கூறுவது? துறவிவேடம் போட்ட காரணத்தால் ஒருவர் பிரதம மந்திரியாக வரமுடிகிறது என்றால், அதே வேடம் போடுகிற காரணத்தால், இன்னொருவர் ஏன் முனிசிபல் கமிஷனராக வர முடியாது? அப்படி என்ன பிரதம மந்திரி வேலையைவிட முனிசிபல் கமிஷனர் வேலை, சிரமமானதா? சிக்கலானதா? அதிகப்படியான அறிவும் ஆராய்ச்சியும் தேவைப்படுகின்ற இலாகாவா? ஒன்றுமில்லையே!!

ஆச்சாரியார் சென்ற ஓராண்டுக்காலமாகத் துறவிவேடம் பூண்டிருந்தார் என்றால், அதற்குக் காரணம், உண்மையிலேயே அவருடைய உள்ளம் பஜகோவிந்தத்தில் ஈடுபட்டு விட்டது என்பதல்ல. அவர், இந்த மாகாணத்தினுடைய பிரதம மந்திரி பதவியைப் பெறுவதற்குரிய ஒரு கருவியாகத் துறவிக் கோலத்தைப் பயன் படுத்திக்கொண்டார் என்பதுதான் உண்மை.

ஆச்சாரியாரின் துறவு, வெறும் வேஷமல்ல, பதவி பெறுவதற்காக ஆடிய ஆட்டமல்ல, பிரதமர் பீடத்தில் அமர்வதற்காக நடத்திக் காட்டிய நாடகமல்ல என்பதெல்லாம் உண்மையானால், ஆச்சாரியாரின் எதிரே பிரதம மந்திரி பதவி தட்டுப்பட்டபோது, அவர் அதை ஆனந்தத்தோடு தாவி, ஆசையோடு அணைத்துக் கொண்டிருக்கக் கூடாது. பிரதம மந்திரி பதவியா—எனக்கு வேண்டாமப்பா என்று சொல்லிவிட்டிருக்க வேண்டும். உலக பந்தங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று உண்மையிலேயே அவருக்கு ஆசை இருந்திருந்தால், அவர் அப்படித்தான் செய்திருப்பார்—அப்படித்தான் செய்திருக்க வேண்டும்.

அரசிளங் குமரர் சித்தார்த்தர், அரண்மனை வாசத்தையும், ராஜ போகத்தையும் துறந்துவிட்டு, பொற்சிலை போன்ற குழந்தையையும் இணையற்ற அழகுடைய மனைவியையும் மறந்து விட்டு, புத்தராக மாறி, உலக பந்தங்களை உதறி, மன அமைதியை நாடி, தனிமை வாழ்வு வாழத் தொடங்கிய பிறகு, உலக பந்தங்கள் பல எத்தனையோ முறை அவரைக் கைதட்டிக் கூப்பிட்டன. சிவந்த மேனி சிற்றிடையார்கள் பலர் தங்கள் வேல்விழியால் அவரை வென்றுவிட பல முறை முயன்றனர். அரசமாளிகையிலிருந்து, மன்னா மீண்டும் வந்திடு என்று அழைப்புகள் பல பறந்தன. உற்றாரும் உறவினரும் எண்ணற்றமுறை வந்து அழைத்தனர். ஆனால் புத்தர், அவற்றிற்கெல்லாம் செவிசாய்த்தாரில்லை. பாசங்களும் நேசங்களும் அவருடைய துறவைக் கலைக்க முயன்றன. ஆனால் அவரோ, உறுதியுடன் நின்றார். தன் இலட்சியத்தைக் கைவிட மறுத்தார்.

அதன் பெயர்தான் உண்மைத் துறவு.

உண்மையான துறவி என்பவன், அப்படித்தான் நடந்து கொள்வான்.

ஆனால் ஆச்சாரியாரோ?

தனக்குப் பிரதம மந்திரி பதவி கிடைப்பதற்குத் துளியளவு சாதகமான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பது தெரிந்தவுடனே, தன் துறவுக் கோலத்தைக் கலைத்துக் கொண்டார்.

பஜகோவிந்தம் பாடுவதைக் கைசோர விட்டார்.

பகவான் நாமத்தை அடியோடு மறந்தார்.

"காவி கமண்டலத்"தைத் தூர எறிந்தார்.

மன அமைதி, முழு ஓய்வு, முதுமைக்காலத் துறவு—இந்தச் சொற்களை யெல்லாம் வாராதீர் என் அருகே என்று விரட்டிவிட்டார்.

இதுவா உண்மைத் துறவு? உண்மைத் துறவு இதுவா?

ஓடுமீன் ஓட, உறுமீன் வரும் அளவும் வாடி இருக்குமாம் கொக்கு என்று ஒரு பழம் பாடல் உண்டு.

வயலினுடைய வரப்புமீது முற்றும் துறந்த முனிவர்போல வீற்றிருக்குமாம் கொக்கு.

வயலிலே நீர் கரைபுரண்டு ஓடுமாம். அந்த நீரிலே சிறு சிறு மீன்கள் துள்ளிக் குதித்துக் கொண்டு போகுமாம். சிறு சிறு மீன்கள் போகும்போதெல்லாம் கொக்கு, அவற்றைப் பார்த்தும் பாராததுபோல கண்களை, ஒரு விதமாக மூடிக்கொண்டிருக்குமாம்.

அந்த நேரத்திலே, கொக்கைக் காண்பவர்கள், ஒற்றைக் கால் மீது நின்று கொண்டு, கண்களை இறுக மூடிக் கொண்டு, அது ஏதோ தவக்கோலம் கொண்டிருக்கிறது என்றுதான் எண்ணுவார்களே தவிர, மீன்களைக் கொத்தியெடுத்து உண்டு மகிழத்தான் அது அங்கே வந்திருக்கிறது என்று சொல்லவே மாட்டார்களாம்.

சிறு சிறு மீன்கள் நீரிலே மிதந்து செல்கிற நேரம் முழுவதும், இப்படி, தவக்கோலம் பூண்ட முனிவர்போலப் பற்றற்ற தோற்றம் வழங்கும் கொக்கு, வளம்மிகுந்ததும் வகையானதுமான பெரிய மீன் ஒன்று நீரில் ஓடக் கண்டதும், திடீரென்று தலையைக் கவிழ்த்து, சடாரென்று அந்த மீனைக் கொத்தியெடுத்து விழுங்கிவிடுமாம்.

நீரிலே மிதந்து வருகிறவெல்லா மீன்களையுமே கொத்திக்கொண்டிருப்பது என்று தொடங்கிவிட்டால், சிறிய மீன்களுக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு, பெரிய மீன்கள், கொக்கின் பார்வையிலே சிக்காமல், தப்பி ஓடிவிட எண்ணமிடக்கூடும். ஆனால் அப்படிச் செய்யாமல், கொக்கு சிறு சிறு மீன்கள் ஓடுகிற நேரத்திலெல்லாம், அவற்றைக் கண்டும் காணாதது போல இருக்கும் காரணத்தால், "ஓஹோ! இந்தக் கொக்குக்கு மீன்கள் மீது ஆசையே இல்லை போலும்" என்று எண்ணி ஏமாந்து, பெரிய மீன்கள், நிதானமாக மிதந்து சென்று, கொக்கின் சூழ்ச்சிக்கு இரையாகின்றன.

"ஓடு மீன் ஓட, உறுமீன் வரும் அளவும் வாடி இருக்கும்" கொக்கின் தவக்கோலம் போன்றதுதான் ஆச்சாரியாரின் துறவி வேடம்.

ஆச்சாரியாரும் அரசியலிலே இருக்கிறார்—மற்ற பலரைப் போல அவரும் பதவி பிடி சண்டையிலே பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார்—பதவி நாற்காலியை நாடும் ஒவ்வொருவரும் தத்தமக்கென்று 'கட்சி' சேர்ப்பது போல, அவரும் தனக்கென்று ஒரு கோஷ்டியை உருவாக்கி வருகிறார்—என்றெல்லாம் நிலைமை இருக்குமானால், அப்போது, ஆச்சாரியாருக்குப் பதவி வரக் கூடாது என்னும் கருத்துடைய பலர் அவரை எதிர்த்து வேலை செய்யக்கூடும். அப்படி அவர்கள் வேலை செய்வதாலே அவருக்குப் பதவி வராமலே போய்விடவும் கூடும்.

ஆனால், இப்போது, ஆச்சாரியார், பதவி பெறுவதற்காகக் கையாளும் முறையோ, கடைசி விநாடி வரையிலே, தான் துறவியாக இருப்பது போல நடிப்பது!

அந்த நடிப்புக்கலையிலே அவர் பெரும் புலவராக இருக்கும் காரணத்தால் அந்த நடிப்பை உண்மை என்றே நம்பி ஏமாந்துவிடுகிறார்கள் பலரும்.

அவர், உண்மையிலேயே துறவியாகிவிட்டார் என்று எண்ணிவிடுகிறார்கள்.

அவருக்கு இந்தப் பதவிகளிலெல்லாம் ஆசை கிடையாது என்று கருதிவிடுகிறார்கள்.

பதவி பிடி சண்டை நடக்கிறபோது, ஆச்சாரியார் ஒருவர் இருக்கிறார் என்கிற எண்ணமே ஏனைய காங்கிரஸ்வாதிகளுக்கு வருவதில்லை.

அவர்தான் பற்றற்ற பெம்மானாயிற்றே—அவர் ஏன் இந்தச் சில்லறைப் பதவிகளுக்கெல்லாம் ஆசைப்படப்போகிறார் என்று எண்ணி, அவர் வராமலிருப்பதற்குச் செய்தாகவேண்டிய செயல்களையெல்லாம் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள்.

அப்படிச் செய்யாமல் விட்டுவிடுகிற காரணத்தால், ஆச்சாரியார், திடீரென்று, கடைசி விநாடியில், பதவி பிடி சண்டையில் ஈடுபட்டு, நானே பிரதமர்! எனதே இராஜ்யம்! என்று முழக்கமிடுகிறபோது, மற்றவர்களால் எதுவுமே செய்யமுடியாமல் போய்விடுகிறது. ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்று பதிகம் பாடுவதைத் தவிர வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கமுடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள் அவர்கள்.

ஆச்சாரியாருடைய துறவுக் கோலத்தின் அடிப்படை இரகசியம் இதுதான்.

மந்திரியாகவோ பிரதம மந்திரியாகவோ ஆகவேண்டும் என்று ஆசைப்பட்ட ஏனைய காங்கிரஸ்வாதிகளெல்லாம் அந்த ஆசைப் பூர்த்திக்காக அரும்பாடு படவேண்டி இருந்தது.

பொதுத் தேர்தலுக்கு நிற்க வேண்டி இருந்தது.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக இருபதாயிரம் முப்பதாயிரம் என்று வெள்ளித் தோட்டாக்களை வாரி இறைக்கவேண்டியிருந்தது.

வாரி இறைக்கப்பட்ட வெள்ளித் தோட்டாக்கள் அதாவது ரூபா அணுபைசாக்கள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்திருக்கின்றனவா என்பதைக்

கண்காணிக்க வேண்டி யிருந்தது.

அதற்காகதாலுக்காதாலுக்காவாக, கிராமம் கிராமமாக, வீதி வீதியாகச் சுற்றி அலையவேண்டியிருந்தது.

கூட்டம் கூட்டமாகப் போட்டு, மக்களிடத்திலே தங்கள் கருத்துக்களை விளக்க வேண்டியிருந்தது.

பல இடங்களிலே மக்களின் கோபாவேசத்தையும் கொதிப்புணர்ச்சியையும் தாங்கிக் கொள்ளவேண்டி இருந்தது.

தேர்தலில் வெற்றி பெற்ற பிறகும் மந்திரியாக வருவதற்காக அவரையும் இவரையும் துணையாகக் கொண்டு காற்றாய்ப் பறந்து காக்கைபோல் அலைய வேண்டி இருந்தது.

அப்படி யெல்லாம் அலைந்து திரிந்தும் பலர், தேர்தலிலே வெற்றிபெறவே முடியவில்லை.

வெற்றி பெற்றவர்களிலேயும், மிகப் பெரும்பான்மையோரால் மந்திரி நாற்காலியை எட்டிப் பார்க்கவும் முடியவில்லை.

ஆனால், ஆச்சாரியாரோ, தேர்தலுக்கே நிற்காமல், ஒத்தைக் காசையும் செலவு செய்யாமல், வீட்டை விட்டே வெளிக் கிளம்பாமல், பொதுக் கூட்டம்—பிரசங்கம்—ஒலிபெருக்கி முதலிய தொந்தரவுகளுக்குச் சிறிதும் உள்ளாகாமல், மேனி குலுங்காமல், ஆடை நலுங்காமல், இருந்த இடத்தில் இருந்தபடியே பிரதம மந்திரியாக ஆகிவிட்டார்.

அவர் இந்த ஓராண்டுக் காலமாகப் பூண்டிருந்த துறவுக் கோலம்தான் ஏனைய காங்கிரஸ் எம். எல். ஏ.க்களை யெல்லாம் ஏமாறச் செய்துவிட்டது.

"வெட்கம் இருக்க வேண்டாமா இந்தக் கிழவருக்கு? இந்த வயதிலே போய் இந்த ஆசையா?"

"காடு வா வா என்கிறது. வீடு, போ போ என்கிறது! இந்த நிலையில் பிரதம மந்திரிப் பித்தமா?"

"அக்கிரமம்! அக்கிரமம்! ஆச்சாரியார் நினைப்பது சுத்த அக்கிரமம்!"

"விட்டுவைக்கக் கூடாதப்பா இந்த அக்ரமத்தை!"

"ஆமாம்! நாம் அனைவரும் கூட்டாக இருந்து, வேறு யாரையாவது பிரதமராக்க வேண்டும்."

"அதுதான் சரி! வேறு யார் வந்தாலும் வரட்டும், இவர் மட்டும் பிரதமராகக் கூடாது! என்ன பேராசை! எவ்வளவு பித்தம்!"

இப்படி யெல்லாம்தான் பேசி இருப்பார்கள் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், ஆச்சாரியாரும் ஏனைய எம். எல். ஏ. க்களைப் போல, தேர்தலில் ஈடுபட்டு, சட்டமன்றத்தில் நுழைந்து, மந்திரிப் பதவிக்காகப் பாடுபட்டிருந்தால்,

ஆனல், இப்போதோ?

"ஆஹா! என்ன தியாகம்! என்ன தியாகம்!"

"இந்தத் தள்ளாத வயதிலேயும், நாட்டாட்சி என்கிற பெரும் பாரத்தை, நமக்காக, அருள் கூர்ந்து சுமக்க வந்திருக்கிறாரே, எவ்வளவு பெருந்தன்மை!"

"முதுமைப் பருவம் — ஓய்வாக இருக்க வேண்டிய நேரம் —ஆனாலும் தேச நன்மையை முன்னிட்டுப் பிரதம மந்திரி என்கிற பெரும் பொறுப்பை ஏற்கிறார். ஆஹா! எவ்வளவு தயாள குணம்!"

இப்படியெல்லாம் பேசுகிறார்கள் அசோக சக்ர எம்.எல்.ஏ.க்கள்.

தூற்றி இருக்க வேண்டியவர்கள் போற்றுகிறார்கள்! வெறுத்து ஒதுக்கியிருக்கவேண்டியவர்கள், அன்புடன் அணைத்துக் கொள்கிறார்கள்!

இந்த மகத்தான மாறுதலுக்குக் காரணம் அவர் போட்ட துறவு வேஷம்!

அந்த வேஷம்தான் மற்ற காங்கிரஸ் எம். எல். ஏ.க்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, அவரை முதலமைச்சராக அமர வைத்திருக்கிறது.

"ஒரு கதை தெரியுமோ பாண்டியா?" — சேரன், கேட்டான்.

"சொல்லேன், கேட்போம்" —நான் 'ஊம்' கொட்டினேன்.

சேரன் சொல்லத் தொடங்கினான்:—

"ஒரு பூனை! சாதாரண பூனையல்ல, பஞ்ச தந்திரங்களையும் அறிந்த பூனை!

ஒரு நாள்!

நீரிலே குளித்து முழுகிற்று! நெற்றியிலேயும் மார்பிலேயும் பட்டை பட்டையாக விபூதியைப் பூசிக்கொண்டது!

உருத்திராட்ச மாலை ஒன்றை எடுத்துக் கழுத்திலே அணிந்து கொண்டது!

இரண்டு கால்களை மடக்கி, அவற்றின் மீது உட்கார்ந்து, உடலை நேராக நிமிர்த்தி வைத்துக் கொண்டது!

கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டது!

சிவ சிவ சம்போ, என்று சிவன் திருநாமம் பஜிக்க ஆரம்பித்தது!

எலிகள் பல அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தும், அவற்றைப்பாராததுபோலஇருந்தது.

ஒரு எலி பூனையின் உடல் மீதே உராய்ந்து கொண்டு சென்றது. அப்போதும் அதனைக் கவனியாததுபோல இருந்து விட்டது.

(15-ம் பக்கம் பார்க்க)

# ஈரோட்டில் பொதுக் குழு

17-9-49-ம் நாள் தென்னாட்டு அரசியல் சரித்திரத்திலே குறிப்பிடத்தக்க வகையில் இலட்சிய வீரர் அண்ணாவின் தலைமையிலே அமைக்கப்பெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுவின் கடைசி கூட்டம் 6-4-52 காலை 11-மணிக்கு ஈரோட்டில், தோழர். ஈ. வி. கே. சம்பத் அவர்கள் இல்லத்திலே சிறப்புற நடந்தேறியது,

நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளதற்கேற்ப, 1952—53-ம் ஆண்டுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது, சட்டதிட்டத்தை உருவாக்குவது, கழகத்திற்கு சொந்தமான நாள்தாள் ஒன்று துவக்குவது ஆகியவைகளைக் குறித்தும் மற்றும் உறுப்பினர்கள் அனுப்பியிருந்த தீர்மானங்கள் குறித்தும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள், விளக்கம் கூறி உறுப்பினர்களின் அபிப்ராயத்தையும் தீர்ப்பையும் கூறுமாறு வேண்டினார். பின்னர் தீர்மானங்கள்மீது பொதுக்குழு உறுப்பினர்கள், தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்து விவாதித்தனர். இறுதியாக தீர்மானங்கள்பல நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழு கூட்டத்திற்குவந்திருந்த பொதுக்குழு எறுப்பினர்கள்.

பொதுச்செயலாளர் அண்ணா, சி. பி. சிற்றரசு, இராம. பழனிச்சாமி, (தெ. ஆ.) ஈரோடு எஸ். ஆர். சந்தானம், ஜலகண்டபுரம் ப. கண்ணன், சென்னை கே. எம். கண்ணபிரான், சென்னை சி. வி. ராசன், காஞ்சி மணிமொழியார், சென்னை சி.டி.டி. அரசு, சென்னை வி. முனுசாமி, சத்தியவாணிமுத்து, சோழவந்தான் ஆவுடையப்பன், இரா. நெடுஞ்செழியன், திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம், ஈ.வெ.கி. சம்பத், னியூர் கே. ஏ. முருகேசன், அரங்கண்ணல், பேளுக்குறிச்சி சோமசுந்தரம், சி. இருளப்பன், ஏ. கே. வேலன், மு. கருணாநிதி, கே.ஏ. மதியழகன், ஈரோடு எ. சங்கரய்யா, கோவை ராஜமாணிக்கம், எம்.ஆர். செல்லய்யா, திருச்சி சு. நெடுமாறன், ஸ்ரீரங்கம் வி. சீனிவாசன், நாகை பாப்பையன், ச. சிவசங்கு, நெல்லை வீரபாகு, விருத்தாசலம் சி. முனுசாமி, மண்ணை ப. நாராயணசாமி, பொன்மலை பராங்குசம், நடிகமணி நாராயணசாமி, திண்டுக்கல் முத்து, மதுரை முத்து, வெத்தாம்பாளையம் பழனிசாமி, கோபி ராஜு, குளித்தலை ராஜா சேர்முகர். விருதை இளஞ்செழியன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஈரோடு அப்பாவு, திருச்சி சாம்பு, ஆர். எஸ். தங்கப்பழம், என். எஸ். இளங்கோ, துறையூர் அழகுமுத்து, எம். எஸ். சிவசாமி, திருச்சி எம். எஸ். மணி, கோவை வி. கோபால், என். வி. நடராசன்.

வர இயலாமைக்கு வருந்தியும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் 24-உறுப்பினர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

1. திராவிடமுன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும் ஆர்வமும் கொண்டு கழக நடவடிக்கைகளில் தீவிரப் பங்குபெற்று பணியாற்றிவந்த சீரிய தோழர்களான உடுமலை கனகராசன், சேலம் வள்ளியப்பன் ஆகியோர் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியது கேட்டு இப் பொதுக்குழு வருந்துவதுடன் அன்னார் குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் நெல்லிக்குப்பம் தொகுதியில் காங்கிரசுக்கு மாறுபாடாகத் தேர்தல் பணி ஆற்றினார் என்ற காரணத்தை உள்ளடக்கிக்கொண்டு தி. மு. கழகத்தைச் சார்ந்த தோழர் மஜீத் என்ற இளைஞரை காங்கிரஸ் தியாகி ஒருவர் குத்திக் கொலை செய்த செயலை அரசியல் அநாகரிகமிருகச் செயலாகக் கருதி அதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் தோழர் மஜீத் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்குப் பொருள்திரட்டித்தரும் முயற்சியை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

3. கடந்த ஐந்தாண்டுகால ஆட்சியில் பஞ்சம், பசி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம். அடக்குமுறை, பட்டினிச்சாவு, நிர்வாக ஊழல், லஞ்சம், கள்ளச்சந்தை, முதலாளித்வக் கொள்ளை, சிறைச் சித்ரவதைகள், பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், தொழிலாளர் இயக்கத்தின் மீது கடும் அடக்குமுறை, எழுத்துரிமை பேச்சுரிமை பறிமுதல் ஆகிய கொடுமைகளுக்குக் காரணமாக இருந்த காங்கிரஸைப் பொதுத்தேர்தலில் பெரும் அளவுக்கு முறியடித்த பொது மக்களை இப்பொதுக்குழு பெரிதும் பாராட்டுகிறது.

4. காங்கிரஸ் பாசிச ஒழிப்புக்காக முற்போக்குக் கட்சிகள் ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற பெயரால் மேற்கொள்ளும் முயற்சிகளை இப்பொதுக்குழு ஆதரிக்கிறது.

5. இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரசல்லாத சட்டசபை உறுப்பினர்கள், காங்கிரஸ் ஆதிக்கம் கூடாது என்று தீர்மானித்த பொது மக்களின் காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சியாலேயே வெற்றி பெற்றவர்கள். எனவே மீண்டும் காங்கிரஸ் ஆட்சி ஆதிக்கம் ஏற்படுவதற்கு நேரிடையாகவோ மறைமுகமாகவோ, துணையாகவோ, உடந்தையாகவோ, காங்கிரசல்லாத சட்டசபை உறுப்பினர்கள் எவரேனும் இருப்பாரேயானால் அச் செயல் பொது மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும். ஆகவே காங்கிரசின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமலும் அரசியல் வலையில் விழாமலும் எச்சரிக்கையாக இருந்து காங்கிரஸ் ஆதிக்கத்தை ஒழிப்பதில் தீவிரமாக முனைந்து பாடுபட வேண்டும் என்று காங்கிரசல்லாத உறுப்பினர்களை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

6. தி. மு. க. ஆதரவு பெற்று சென்னை சட்டசபை, டெல்லி மக்கள் சபை ஆகியவற்றிற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இப்பொதுக்குழு பாராட்டுவதோடு திராவிடநாடு பிரிவினை இலட்சியத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

7. சிறுபான்மையினராக வெற்றிபெற்று வந்திருக்கும் காங்கிரஸை சென்னை ஆட்சி பீடத்தில் அமர்த்தும் நோக்கத்தோடு ஜனநாயகப் பண்பைப் புறக்கணித்துத் தோழர். சி. இராஜகோபாலாச்சாரியாரை முறையில்லாத வழியில் சென்னை மேல்சபை உறுப்பினராக்கி இருக்கும் செயலை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்

டிப்பதுடன் இந்தச் செயலைக் கண்டிக்கவும் மாற்றவும் எடுக்கவும் தக்க முயற்சிகளுக்கு முழு ஆதரவு தருவது என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

8. (a) காங்கிரஸ் ஆதிக்க வெறுப்புணர்ச்சியைப் பொதுமக்கள் வெளிப்படையாகவே பொதுத் தேர்தலின் வாயிலாக காட்டியபிறகும், காங்கிரஸ் ஆதிக்கத்தை மீண்டும் வலுக்கட்டாயமாகத் திணிக்க வேண்டும் என்ற கெட்ட நினைவுடனும், ஆட்டங் கொடுத்துவரும், வடநாட்டு ஆதிக்கத்தைச் சரியாமல் பாதுகாக்கும் நோக்குடனும் வடநாட்டுக் காங்கிரஸ்காரரை சென்னைக் கவர்னராக நியமித்த அடாத செயலை இப் பொதுக்குழு மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(b). கவர்னர் நியமனத்தைக் கண்டித்துக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிய முற்போக்குக் கழகங்களை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

9. கழகத்தின் சட்டதிட்டப்படி புதிய அமைப்பை உருவாக்க கீழ் கண்டவர்களடங்கிய தனிக் குழுவை இப்பொதுக்குழு நியமிக்கிறது.

ஈ. வி. கே. சம்பத், கே. ஏ. மதியழகன், சென்னை எஸ். எஸ். பி. லிங்கம்.

(10) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வோரிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கழகப் பிரச்சார பயிற்சி வகுப்பும் கழகப்பணியாளர்பயிற்சி வகுப்பும் நடத்த வேண்டும் என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

11. (a) தி. மு. க. முதல் மாநில மாநாட்டின் மூலம் மீதப்பட்டுள்ள தொகையில், ரூ. 5,612 கழகக் கட்டடத்திற்குத் தரப்படவேண்டிய கடனைக் கொடுத்து எஞ்சிய தொகையைக் கொண்டு கழகத்தின் சார்பில் தமிழ் நாள் தாள் துவக்க வேண்டுமென்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(b) கழகத்தின் தமிழ் நாள் தாளைத் துவக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளுமாறு கழகப் பொதுச் செயலாளரை இப்பொதுக் குழு கேட்டுக் கொள்ளுகிறது.

(c) கழக நாள் தாளுக்கு முன் கூட்டியே ஒவ்வொரு கிளைக் கழகமும் குறைந்தது தாளின் ஒரு ஆண்டு சந்தாத்தொகையையாவது அனுப்பிவைக்க வேண்டும் என்று எல்லாக் கிளை கழகங்களையும் பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

(d) கழகத்தின் சார்பாக நடைபெறும் பொதுக் கூட்டம், ஆண்டு விழா, நாடகம் ஒவ்வொன்றிலும் கழக நாள்தாள் வளர்ச்சிக்கு ரூபாய் ஐந்து அவசியம் அனுப்பி வைக்க வேண்டுமென்று இப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

12. (a) பிரிட்டிஷ் ஏகாதிபத்ய பிடிப்பிலிருந்து எகிப்தை மீட்க நடத்தப்படும் விடுதலைக் கிளர்ச்சியை இப்பொதுக்குழு ஆதரிக்கிறது.

(b) டுனிஷியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்யவாதிகள் மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கி மக்கள் சர்க்காரின் தலைவர்களைக் கைது செய்து அடக்குமுறை வெறியாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போக்கை இப்பொதுக்குழுவன்மையாகக் கண்டிப்பதுடன், கொடுமைக்கு ஆளான டுனிஷிய மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு டுனிஷிய மக்களின் விடுதலைக் கிளர்ச்சி வெற்றி பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

13. இராயலசீமாவில் பயங்கரமான அளவிலும் மற்ற மாவட்டப் பகுதிகளில், கவலைத் தரத் தக்க அளவிலும் பரவிக்கொண்டு வரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் நிலை கண்டு இப்பொதுக்குழு வருந்துவதுடன், இப்பஞ்சத்திற்குக் காரணமாயிருந்த ஆட்சிமுறையை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆங்காங்குள்ள முற்போக்காளர்கள் பஞ்ச நிவாரணப் பணியில் ஈடுபடவேண்டுமாய் இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

14. திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கம், கழகத் தோழர்களான ஜான், மனோகரன் ஆகியோரின் பேச்சுரிமையைப் பறித்து தென் தாமரைக் குளத்தில் 144 தடையுத்தரவை விதித்து அதை மீறினார்கள் என்ற குற்றத்திற்காக அவர்களைச் சிறைக்கனுப்பியிருக்கும் அடக்குமுறைக் கொடுமைப் போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

---

# சிறைச்சாலை என்ன செய்யும்?

## தி. மு. க. தீரர்கள் வீரமுழக்கம்

### ஜான்—மனோகரன்—இருவரும் சிறையில்!

5—4—52 சனியன்று கீழ்கண்ட தோழர்கள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிறப்பித்த சம்மன்ஸ் பிரகாரம் ஆஜராயினர். முதல் மாஜிஸ்டிரேட் தோழர் கோவிந்தசாமி ஐயர், தடையுத்தரவை மீறினீர்களா—எதிர்த்து வழக்காடுகிறீர்களா என்று கேட்ட போது, மீறினோம் — எதிர்த்து வழக்காடப்போவதில்லை என்று அனைவரும் கூறினர்.

பின்னர் அபராதமாக தலா ரூபாய் 20-ம், கட்ட மறுத்தால் ஒரு வாரச் சிறைத்தண்டனை என்று தீர்ப்பளிக்க, கட்சி தீர்மானத்திற்கிணங்க அபராதம்கட்டுவதற்கில்லை என்று கூறி சிறைத்தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர்.

விசாரணையின் போது, கழக முக்கியஸ்தர்களும், கிளைக் கழகச் செயலாளர்களும், தோழர்களுமாக சுமார் 200-க்கு மேற்பட்டவர்கள் அங்கே குழுமி இருந்தனர்.

நாகர்கோயில வி. எம். ஜான்
,, கி. மனோகரன்
தோப்பூர் மு. சுப்ரமணியம்
குமரிமுனை சி. குமாரசாமி
கோட்டானூர் எ. பகவதிப் பெருமாள்
தென்தாமரைக்குளம் தோழர்களான

எஸ். செல்லதுரை, எஸ். ஆதிநாராயணன், எஸ். செல்லப்பன், எஸ். தங்கசாமி, எ. தங்கப்பழம் டி. பொன்னையா ஆகிய 11-தோழர்களை சிறைக்குக் கொண்டுபோவதற்காக போலீஸ் வானில் ஏற்றிய போது குழுமியிருந்த மக்கள் திராவிட நாடு திராவிடருக்கே, அண்ணா வாழ்க, ஜான் வாழ்க, மனோகரன் வாழ்க, அடக்குமுறையை ஒழிப்போம்; என்று விண்ணதிர முழக்கினர்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும், ஆச்சாரியார் அந்தப் பட்டியலிலே தன் பெயர் இல்லாதது பற்றிக் கவலைப்படவுமில்லை. அந்தப் பட்டியலைப்பற்றிய தன் கருத்துரையை வெளியிடவுமில்லை.

"நீங்கள் கட்டாயம் தேர்தலுக்கு நிற்கத்தான் வேண்டும்." என்று காங்கிரஸ் தளபதிகள் பலர் அவரை வேண்டி வேண்டி அழைத்தனர். ஆனால் அவரோ முடியாது முடியாது என்று மறுத்துக்கூறி விட்டார்.

பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சியை முறியடித்துவிட்டு வெற்றிமாலை சூடப் போவது உறுதி என்றும், எனவே தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் மந்திரிசபைதான் நாட்டிலே அமையப் போகிறது என்றும், ஆச்சாரியார் மட்டும் தேர்தலுக்கு நிற்க ஒப்புக்கொண்டால் நிச்சயம் அவரே பிரதம மந்திரியாவார் என்றும் பலர் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அப்போதும் ஆச்சாரியார் துறவுக் கோலத்தைக் களைதல் இயலாது என்று அறிவித்துவிட்டார்.

ஆச்சாரியாரோ தேர்தலுக்கு நிற்கவில்லை—தேர்தலுக்கு நிற்பவர்களில் மிகவும் செல்வாக்குப் பெற்றவரோ சத்தியமூர்த்தி—ஆகவே சத்திய மூர்த்தியார்தான் முதல் காங்கிரஸ் மந்திரிசபையின் முதல் மந்திரியாவார் என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.

அந்தப் 'பேச்சு', நாடெங்கும் நடமாடத் தொடங்கிய பிறகும்கூட ஆச்சாரியார் துறவுக் கோலத்தைக் கைவிடவுமில்லை. திருச்செங்கோட்டைவிட்டு வெளியே புறப்படவுமில்லை.

"சரி! சரி! ஆச்சாரியார் உண்மையிலேயே துறவு பூண்டுவிட்டார்! இனி வரவே மாட்டார் அரசியலுக்கு!" என்று எல்லோரும் முடிவுகட்டிவிட்டனர்.

தேர்தல் அபேட்சகர் தங்கள் அபேட்சா பத்திரத்தைத் தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்வதற்குரிய கடைசிநாள் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. அப்போதும் ஆச்சாரியார், ஆஸ்ரமத்தைவிட்டு வெளியே வரும் எண்ணம் தனக்குக் கிடையவே கிடையாது என்று தெரிவித்துவிட்டார்.

சத்ய மூர்த்தி சாஸ்திரிகள்தான் முதலமைச்சராகப் போகிறார் என்று நாடெங்கும் உரையாடல் புறப்படலாயிற்று.

ஆம்! அது உண்மை! என்றுதன்னுடைய அழகான தலையை அற்புதமாக அசைத்துக் காட்டினார் சத்தியமூர்த்தி

அபேட்சா பத்திரம் தாக்கல் செய்வதற்கு நாளையோ மறுநாளோ கடைசிநாள்.

இந் நிலையில் எங்கிருந்தோ புறப்பட்டார்கள் ஆச்சாரியாரின் நண்பர்கள் பலர்.

நீங்கள் காங்கிரஸ் அபேட்சகராக இருந்துதானாக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

திடீரென்று அவர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கிவிட்டார் ஆச்சாரியார்.

அதாவது, பத்திரிகைகள் அப்படித் தெரிவித்தன.

ஆனால் உண்மை என்னவென்றால், "நீங்கள் வற்புறுத்துவது போல வற்புறுத்துங்கள். நான் உங்களுக்காக ஒப்புக்கொள்வது போல ஒப்புக் கொள்கிறேன்." என்பதாக ஆச்சாரியாரும் அவருடைய நண்பர்கள் சிலரும் ஒருவருக்கொருவர் முன் கூட்டியே பேசிவைத்துக் கொண்டு ஆடிய அரசியல் நாடகம் இது.

ஆச்சாரியாருக்காக சத்தியமூர்த்தியார் விலகும்படி செய்யப்பட்டார்—எந்தத் தொகுதியில் சத்தியமூர்த்தியார் நிற்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோ அதே தொகுதியில் அவருக்குப் பதிலாக ஆச்சாரியார் காங்கிரஸ் அபேட்சகராக நின்றார்—வென்றார்—பிரதம மந்திரியானார்—சென்னை மாகாணத்திலே மூன்றாண்டுக் காலம் கொடுங்கோல் தர்பார் புரிந்து வந்தார்.

"என்னவோ இப்போதாவது மனம் இறங்கிற்றே ராஜாஜிக்கு! அந்த மட்டில் நாம எல்லாம புண்ணியசாலிகள்தான்!"

"அவருக்கு என்னவோ இந்தப் பட்டம் பதவி மந்திரி தந்திரி இவற்றிலெல்லாம் துளியும் விருப்பம் கிடையாது. என்றாலும் என்ன செய்வார்பாவம்! எல்லோருமாகச் சேர்ந்து வற்புறுத்துகிறபோது எப்படி அவர் இணங்காமல் இருக்க முடியும்?"

"கடைசி வரையிலே அவருக்கு விருப்பமே இல்லையாம். திருச்செங்கோடு ஆசிரமத்தை விட்டு வெளியே வருகிறபோது கூட, அதைவிட்டுவிட்டு வர மனம் இல்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டேதான் வந்தாராம்!"

"அவர் என்ன சாமான்ய மனிதரா இந்த மந்திரிப் பதவி மீது ஆசை வைக்க! அவர் மகாபுருஷர்! உத்தமர்! கர்மயோகி! நாமெல்லாம் நல்லபடி இருக்கவேண்டுமே என்பதற்காகத்தான் இந்தப் பதவியை ஒப்புக் கொண்டிருக்கிறார்! வேறெதற்கு!"

காங்கிரஸ் வட்டாரம் இதுபோலப் பேசலாயிற்று தேர்தலிலே அவர் நிற்க ஒப்புக் கொண்டதும்!

இப்படிப் பேசப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர் துறவி நாடகம் ஆடியிருக்கிறார் ஆறு ஏழு மாத காலம்! 1936-ம் ஆண்டின் இடையில் அவர் தொடங்கிய மகத் துறவு நாடகம், 1937-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவர் பிரதமமந்திரியாகப் பதவியேற்று வெல்லிங் கவர்னர் எர்ஸ்கினுடன் கைகுலுக்கிற அந்தக் கடைசி காட்சியோடு முற்றுப் பெற்றது.

அவர் பிரதம மந்திரியாகி மந்திரிசபை அமைத்ததும், எந்த டாக்டர் ராஜனின் துரோகச் செயலால் பொது வாழ்வின் புனிதத் தன்மையே கெட்டுவிட்டது என்று முன்பு கூறிவிட்டு துறவுக்கோலம் பூண்டாரோ அதே டாக்டர் ராஜனை அவசர அவசரமாக அழைத்து அவரைச் சுகாதார மந்திரியாக்கிக் கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தார் ஆச்சாரியார்.

டாக்டர் ராஜனின் துரோகச் செயல்மீது ஆச்சாரியாருக்கு உண்மையில் வெறுப்போ ஆத்திரமோ இருந்திருந்தால அவருக்கு ஒரு மந்திரிப் பதவி கொடுத்து மலர் மாலை சூட்டியிருப்பாரா ஆச்சாரியார்? மாட்டாரே!

டாக்டர் ராஜன்மீது ஆச்சாரியாருக்கு உண்மையில் வெறுப்புகிடையாது என்பதையும், அப்படி வெறுப்பு அடைந்து அதற்காகப் பொதுவாழ்வையே துறப்பதாகக் கூறியது வெறும் வேஷமே தவிர வேறில்லை என்பதையும், அந்த வேஷம் பூண்டதற்குக் காரணம் பிரதம மந்திரியாவதற்கு அதுதான்

(16-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 12—4—52 சனிக்கிழமை


# பழைய தொடர்கதை— புதிய அத்தியாயம்!

ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சம்பவம்!

திருச்சிராப்பள்ளியில் ஜில்லா போர்டு தேர்தல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருச்சித் தீரர்—எவருக்கும் தலை வணங்காத அஞ்சாத நெஞ்சர் தோழர் இரத்தினவேலு தேவர், ஜில்லா போர்டு தேர்தலில்' காங்கிரசின் சார்பில் அபேட்சகராக நிற்கிறார்.

ஆச்சாரியார், அந்தக் காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் இருதயபீடம் போன்றவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியையே தன் மனம்போனபடி ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தவர்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் என்றால் ஆச்சாரியார், ஆச்சாரியார் என்றால் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் என்கிற நிலை அப்போது இருந்து வந்தது.

ஆச்சாரியார் இட்டது கட்டளை, சொன்னது வேதவாக்கு என்கிற பழமொழி காங்கிரஸ் வட்டாரத்தில் உலவிக்கொண்டிருந்தது.

அவ்வளவு பலமும் செல்வாக்கும் பெற்ற ஆச்சாரியார்; தோழர் ரத்தினவேலு தேவரை முழு மனதுடன் ஆதரித்தார்.

தேவர் வெற்றிபெற்றே தீர வேண்டும் என்று வீரமுழக்கமிட்டார்.

தேவரின் வெற்றி காங்கிரசின் வெற்றி என்று வியாக்யானம் செய்தார்.

தேவர் தோற்றால் காங்கிரசுக்கே அவமானம் என்று விளக்கவுரை தந்தார்.

ஆச்சாரியார் மட்டுமல்ல, தமிழ் நாடு காங்கிரஸ் இயந்திரம் முழுவதுமே தேவரின் வெற்றிக்காக அரும்பாடுபட்டது.

தேவர், காங்கிரஸ் பிரதிநிதி.

தேவர், காங்கிரஸ் கட்சியினரால் அபேட்சகராக நிறுத்தப்பட்டவர்.

தேவர், திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் செல்வாக்குப் படைத்தவர் என்று எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்.

தேவர், காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டியிட ஒப்புக்கொண்டது, காங்கிரஸ் கட்சியின் பெரிய 'அதிர்ஷ்டம்' என்று காங்கிரஸ் தலைவர்கள் பலர் வெளிப்படையாகக் கூறும் அளவுக்கு முக்யத்வம் வாய்ந்தவர் தேவர்.

இத்தகைய செல்வாக்கும் செல்வமும் படைத்த தன் பிரதிநிதியை ஆதரித்து காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் ஆச்சாரியாரும் தீவிரப் பிரசாரம் புரிந்ததிலே ஆச்சரியம் எதுவுமில்லை.

அதுதான் இயற்கையும் கூட.

ஓமந்தூரார் மந்திரி சபையிலே அங்கம் வகித்திருந்த இதே டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், அந்தக் காலத்திலும், காங்கிரசின் முக்கிய தூண்களில் ஒருவராகத் திகழ்ந்து வந்தார்.

டாக்டர் ராஜன், திருச்சி வாசி. திருச்சி மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் தனிப் பெருந் தலைவர்.

திருச்சி ஜில்லா போர்டு தேர்தலில்தான் தோழர் தேவர் காங்கிரஸ் பிரதிநிதியாக நிற்கிறார்.

அந்த மாவட்டத்தின் தலைமை காங்கிரஸ் தலைவர்தான் டாக்டர் ராஜன்,

இந்த நிலையில், டாக்டர் ராஜன், தோழர் தேவரை ஆதரித்து அதி தீவிரப் பணியாற்றுவார் என்று தானே யாரும் எதிர்பார்ப்பார்கள்!

ஆனால் ஆச்சரியகரமான நிகழ்ச்சி என்ன தெரியுமோ?

டாக்டர் ராஜன், தோழர் தேவரை எதிர்த்து நின்ற காங்கிரசல்லாத பிரதிநிதி ஒருவரை ஆதரித்து அரும்பணியாற்றினார்.

தோழர் தேவரைத் தோற்கடிக்க தன்னால் இயன்றவரை பாடுபட்டார்.

திருச்சி மாவட்டத்துக் காங்கிரஸ் தளபதிதான் தோழர் டி. எஸ். எஸ். ராஜன்.

ஆனால் அந்தக் காங்கிரஸ் தளபதி தோழர் ராஜன்தான் காங்கிரஸ் அபேட்சகர் தோழர் தேவரை எதிர்த்துத் தீவிரப் பிரசாரம் புரிந்தார்.

காங்கிரசின் கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் குறைக்கும் விதத்திலே நடந்துகொண்டார் டாக்டர் ராஜன்.

ஆச்சாரியார் இந்த வெட்கக் கேடான சம்பவத்தைப் பார்த்தார்.

உள்ளம் வெதும்பினார்.

இராஜனா இப்படிச் செய்தார் என்று ஆச்சரியப்பட்டார்.

"டாக்டர் இராஜன் என்னுடைய உயிருக்குயிரான நண்பர். பழம் பெரும் தேசியத் தலைவர். தேச பக்தத் தீயிலே புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கம். அப்பழுக்கற்ற தேசாபிமானி என்று அனைவராலும் கருதப்பட்டவர். நாட்டுக்கே வழிகாட்டவேண்டிய நல்லறிஞர். அப்படிப்பட்ட அரும்பெரும் தலைவர் டாக்டர் ராஜனே இப்படிப்

பட்ட ஒழுங்கீனமான செயலில் இறங்கிவிட்டார் என்றால், இனி, மற்றவர்கள்மட்டும் கட்டுப்பாட்டைக் குலைக்காமல் நடந்துகொள்வார்கள் என்று நான் எப்படி நம்பமுடியும்? டாக்டர் இராஜன் அவர்களே இப்படி நடந்துகொண்டதிலிருந்து இந்த நாட்டுப் பொது வாழ்வின் புனிதத் தன்மையே கெட்டுப்போய்விட்டது என்றுதான் நான் கருதுகிறேன், இவ்வாறாகப் புனிதத் தன்மையை இழந்து சீர்குலைந்து கிடக்கும் பொதுவாழ்வில் இனியும் இருக்க என் மனம் இடம் தரவில்லை. எனவே நான், இனி, பொது வாழ்விலிருந்தே விலகிவிட முடிவு செய்துவிட்டேன். காங்கிரஸ் கட்சியோடு எனக்குள்ள எல்லாத் தொடர்புகளையும் இன்றுமுதல் நான் விட்டுவிட்டேன்.

அந்தக் கட்சியில் நான் வகித்து வருகிற எல்லாப் பதவிகளையும் இன்றுமுதல் இராஜிநாமா செய்கிறேன். இனி நான் அந்தக் கட்சியில் ஒரு சாதாரண நான்கணா உறுப்பினராகக்கூட இருக்கமாட்டேன்''

இந்தக் கருத்தை உள்ளடக்கிய ஓர் நீண்ட அறிக்கையை வெளியிட்டார் ஆச்சாரியார்.

பொதுவாழ்வு, புனிதத் தன்மையை இழந்துவிட்ட காரணத்தால், பொது வாழ்விலிருந்து தான் முற்றிலும் விலகிக்கொள்வதாக அறிவித்துவிட்டார்.

காங்கிஸ் விவகாரங்களுக்கும் தனக்கும் இனி எத்தகைய தொடர்பும் கிடையாது என்று வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டார்.

அரசியல் பிரச்சினைகளைப் பொறுத்தவரை இனிமேல் தன்னிடமிருந்து யாரும் எத்தகைய வழிகாட்டுதலையும் எதிர்பார்க்க வேண்டாம் என்றும் கூறிவிட்டார்.

திருச்செங்கோட்டுக்குச் சென்று, காந்தி ஆசிரமம் அமைத்து, கைராட்டையைச் சுழற்றி, கதராடையை உருவாக்கும் நிர்மாண வேலை ஒன்றை மட்டுமே தான் இனி செய்யப் போவதாகவும் அமைதி முரசு கொட்டினார்.

தக்ளியும் கையுமாகவேதான் இனி இருக்கப்போவதாகவும், அரசியல் வாழ்க்கையை அடியோடு துறந்துவிட்டதாகவும், திருச்செங்கோடு ஆசிரமத்தில்தான் தன்னை இனி யாரும் காணமுடியும் என்றும், மன அமைதி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தான், இனி, அங்கேயே தங்கிவிடப்போவதாகவும் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பிவைத்தார்.

ஆச்சாரியார் அவர்களின் இந்த அற்புதமான ''தியாகத்தை''க் கண்டு நாடே ஆச்சரியப்பட்டது,

டாக்டர் இராஜன் செய்த பாவத்திற்காக, தன்னுடைய பிரகாசமான அரசியல் எதிர்காலத்தையே தியாகம் செய்துவிட்டாரே, என்ன பெருந்தன்மை, என்ன பெருந்தன்மை என்று தேசபக்த சிங்கங்களெல்லாம் மூக்கின்மீது விரல் வைக்கத் தொடங்கிவிட்டன.

பொது வாழ்வு தூயதாகவும் சிறந்ததாகவும் கண்ணியம் மிகுந்ததாகவும் இருக்கவேண்டும் என்பதிலே ஆச்சாரியாருக்கு இருந்த அக்கறையைக் கண்டு, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமிருந்து பாராட்டுரைகளும் வாழ்த்து மடல்களும் வந்து குவியலாயின.

இந்தக் காலத்திலேயும் இப்படி ஒரு புண்ணிய புருஷர் இருக்கிறாரா என்று வியப்புக் குரல் எழுப்பின தேசிய ஏடுகள்.

மானிட சாதி செய்துள்ள பாவங்களையெல்லாம் போக்க, தன்னுடைய உடலையே சிலுவையில் அறைபட்டு குருதி கொட்டும் நிலைக்கு உள்ளாகும்படி அர்ப்பணித்துக்கொண்ட தியாகத்தின் சிகரம் ஏசுநாதர் போன்றவர் இந்த ஆச்சாரியார் என்று உவமான உவமேய 'பாணி'யிலே விரிவுரை ஆற்றினர் காங்கிரஸ் சொற்போர் மன்னர்கள்.

அரசியல் பொது வாழ்வு புனிதம் அற்றதாக இருக்கும் காரணத்தால், நான் அந்தப் பொது வாழ்விலிருந்து விலகிக்கொள்கிறேன் என்று ஆச்சாரியார் வெளிப்படையாக அறிவித்துவிட்டு அந்தப்படியே விலகிக்கொண்ட சம்பவம், உண்மையிலேயே, பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கிவிட்டது.

''என்ன இருந்தாலும் ஆச்சாரியார் ஆச்சாரியார்தான்! அவருடைய ஒழுக்கசீலமும் தியாக சிந்தையும் தூய்மை நோக்கமும் வேறு யாருக்கு வரும்?'' என்று எதிர்க்கட்சிக்காரர்கள்கூட ஆச்சாரியாரை மனமாரப் பாராட்டி வாயார வாழ்த்தத் தொடங்கினர்.

ஆனால் ஆச்சாரியார் உண்மையிலேயே பொதுவாழ்வை விட்டு விலகவில்லை என்பதும், பொது வாழ்வை விட்டு விலகுவதுபோல நடித்தாரே தவிர வேறில்லை என்பதும்; அவருடைய உள்ளத்தின் உள்ளே பொது வாழ்வைவிட்டுவிலகும் நோக்கம் துளியளவும் படிந்திருக்கவில்லை என்பதும், அதற்கு நேர்மாறாக அரசியல் வாழ்விலே மேலும் மேலும் உயர்ந்த பதவிகளையும் நிலைகளையும் அடைய வேண்டுமென்பதே அவருடைய உள்ளக் கிடக்கையாக இருந்தது என்பதும், அந்த உள்ளக்கிடக்கையை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு மார்க்கமாகவே அவர் துறவு வேடத்தைக் கருதினார் என்பதும், அவர் துறவுக் கோலம் பூண்டதற்கு ஆறு ஏழு மாதங்களுக்குப் பின்னால்தான் தெரியவந்தது.

ஆறு ஏழு மாதங்களுக்குப் பின்னால் உண்மை தெரியவந்தது. ஆனால் அதுவரையிலே, ஆச்சாரியார் உண்மையிலேயே துறவு பூண்டுவிட்டார் என்றுதான் எல்லோரும் எண்ணிவந்தனர்.

நாட்டிலே பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள். ஆனால் ஆச்சாரியார் அதுபற்றி வாய் திறக்கவில்லை.

பொதுத் தேர்தலிலே அதிகார பூர்வமாகக் கலந்துகொண்டு எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடுவது என்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது. ஆனால் அந்த முடிவைப்பற்றியும் ஆச்சாரியார் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

ஒவ்வொரு தொகுதியிலேயும் யார் யாரைக் காங்கிரஸ் கட்சியின் அபேட்சகர்களாக நியமிப்பது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதிதீவிரமாக ஆலோசித்து வந்தது. அந்த ஆலோசனையிலும் ஆச்சாரியார் பங்கு கொண்டாரில்லை.

ஆலோசனைகள் முடிந்து, பரிசீலனைகள் முற்றுப்பெற்று, காங்கிரஸ் அபேட்சகர்களின் பட்டியல் தொகுதிவாரியாக வெளியிடப்பட்டது. அப்படி வெளியிடப்பட்ட

(7-ம் பக்கம் பார்க்க)

# கூட்டில் சேராத கடிதம்



கனம்
எம். ஏ. மாணிக்கவேல் நாயக்கர்,
ஆச்சாரியார் மந்திரிசபை,
சென்னை.

அமைச்சரே!

வணக்கம். புதன்கிழமை இரவு அன்பர் ஆச்சாரியார் அவர்கள் வெளியிட்டுள்ள அவருடைய மந்திரிசபைப் பட்டியலிலே தங்களுடைய பெயரும் இருக்கக் கண்டேன். ஆச்சரியப்பட்டேனில்லை-ஆத்திரம், அடையவில்லை — பரிதாபப் பட்டேன்—சற்று வருத்தமும் அடைந்தேன்.

ஆச்சாரியார் அமைத்துள்ள மந்திரி சபையிலே தங்களுடைய பெயரும் இருக்கும் என்பது ஏழெட்டு நாட்களுக்கு முன்னரே எனக்கு நன்றாகத் தெரியும். சென்னை சட்ட சபையில் உள்ள கம்யூனிஸ்டுகள், பிரஜாகட்சியினர், உழைப்பாளி கட்சியினர், முற்போக்கு எண்ணம் படைத்த சுயேச்சை வாதிகள், தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்ற தீரர்கள் ஆகிய இத்தனை பேரும் சேர்ந்து அமைத்த ஐக்கிய ஜனநாயக முன்னணியில் கலந்து கொண்டு பணியாற்ற முடியாது என்று என்றையதினம் தாங்கள் மந்திரிகளுக்கு அறிக்கை அனுப்பினீரோ அன்றைக்கே எனக்குத் தெரியும் காங்கிரஸ் மந்திரி சபையில் இடம் பெறத்தான் இந்த ஆகாத வழியிலே அவசர அவசரமாகப் போகிறீர்கள் என்பது! ஆகவேதான் ஆச்சாரியார் அளித்துள்ள பட்டியலிலே தங்களுடைய பெயரைக் கண்டபோது எனக்கு ஆச்சரியம் துளியும் ஏற்படவில்லை.

ஆச்சரியம் ஏற்படாதது மட்டுமல்ல ஆத்திரமும் ஏற்படவில்லை. ஐயோ பாவம் என்கிற பரிதாப உணர்ச்சியும், கேவலம் மந்திரிப் பதவி என்கிற சிறிய காலத்தைப் பெறுவதற்காக மக்களின் பேராதரவு என்கின்ற பெரிய ஊதியத்தை இழந்து விட்டீரே என்பதை எண்ணிச் சற்று வருத்த உணர்ச்சியும்தான் எனக்கு ஏற்பட்டது.

நண்பரே! மாணிக்கவேலரே! புதிய அமைச்சரே! ஓய்வாக இருந்து சற்று நிதானமாகச் சிந்தித்துப் பாரும். நீர் இப்போது செய்துள்ள காரியம் நியாயமானதுதானா? காங்கிரஸ் மந்திரி சபையிலே மகிழ்ச்சியுடன் சென்று மோகன கீதம் பாடியபடி அமர்ந்துகொண்டிருக்கிறீரே, இது முறைதானா? பொதுத் தேர்தல் நடந்து முடிந்து இன்னும் முழுமையாக நான்கு மாதங்கள்கூட முடியவில்லையே - அதற்குள்ளாக, பொது மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை மறந்துவிட்டு, அந்த வாக்குறுதிகளுக்கு நேர் மாறாக நடந்துகொள்ளத் துணிந்து விட்டீரே, இது நியாயம்தானா?

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளூர் தொகுதியில் தான் நீங்கள் ஓர் அபேட்சகராக நின்று வெற்றி பெற்று எம். எல். ஏ. வாக வந்திருக்கிறீர்கள். அதே தொகுதியில்தான் தோழர் அண்ணாமலை செட்டியார் என்கிற காங்கிரஸ்காரர் காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராக நின்று படுதோல்வி அடைந்து பொது மக்களால் விரட்டியடிக்கப்பட்டு சட்டசபையையே எட்டிப் பார்க்க முடியாத நிலையில் இன்றையதினம் நிறுத்தப் பட்டுவிட்டார்.

போளூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தோழர் அண்ணாமலை செட்டியாருக்குத் தோல்வித் தோட்டாவைப் பரிசாக அளித்துவிட்டு, தங்களுக்கு மட்டும் வெற்றி மாலையைச் சூட்டினார்கள் என்றால் என்ன காரணம் அதற்கு? அண்ணாமலை செட்டியாரைவிட தாங்கள் அறிவிலோ ஆற்றலிலோ சிறந்தவர் என்பதற்காகவா? கிடையாதே! அண்ணாமலையாரைவிட நாட்டையாளும் பக்குவம் தங்களுக்கு அதிகம் உண்டு என்பதற்காகவா? இல்லையே! அண்ணாமலையார் காங்கிரசின் பிரதிநிதி! இந்த ஒரு வேறுபாட்டுக்காகத் தானே பொது மக்கள் அண்ணாமலையாரைப் புறக்கணித்துவிட்டு தங்கள் கழுத்திலே வெற்றி மாலையைச் சூட்டினார்கள்? இல்லையென்று கூற முடியுமா தாங்கள்?

காங்கிரஸ் கட்சி ஆறாண்டுகாலம் நாட்டாட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தது. அப்படி அமர்ந்திருந்த காரணத்தால் மக்கள் கண்ட பலன், பசி! பஞ்சம்! பட்டினி! லஞ்சம்! ஊழல்! கள்ளமார்க்கட்! இவைகள்தான்!

காங்கிரஸ் கட்சி தங்களுக்கு வாழ்வளிக்கும் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் அந்தக் கட்சியோ மரணத்தைதான் மக்களுக்கு நன்கொடையாக அளித்தது.

தேசியத் தீரர்கள் நாடாளவந்துவிட்டார்கள் — பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் இனி ஏது பஞ்சம் என்று எண்ணிப் பூரிப்படைந்தார்கள் பொது மக்கள் அப்படிப்பட்ட பூரிப்பா கொள்கிறீர்கள்-அதுதானே கூடாது என்று கூறிய வண்ணம் பேனா முறிப்புச் சட்டங்களையும் நாக்கறுப்புத் திட்டங்களையும் அள்ளி அள்ளி வீசினார்கள் ஆட்சியாளர்கள்.

மகாத்மாவின் சீடர்கள் மண்டலமாள வந்திருக்கிறார்கள்-இனி அன்பும் அகிம்சையும் சத்தியமும் ஒழுக்கசீலமுமே ஆட்சிப் பீடத்தின் அருமைப் பண்புகளாக இருக்கும் என்று மனக்கோட்டை கட்டினார்கள் மக்கள். அந்தக் கோட்டையை இடித்து நொறுக்கித் தூள் தூளாக்கி விட்டார்கள் ஆட்சியாளர்கள். தடியடி - துப்பாக்கி வேட்டு - 144 சட்டம்-பொதுக் கூட்டங்களுக்குத் தடை - சொல்லொணாத லஞ்சம் இவைகளையே தங்களுடைய நீங்காத தோழர்களாகக் கொண்டு விட்டார்கள்.

தொழிலாளிகள் வறுமையால் துடித்தார்கள். விவசாயிகள் விலைவாசி உயர்வால் வேதனைப் பட்டார்கள். மத்தியதர மக்கள் அனலிடைப் புழுக்களென வாடி வதங்கினார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சியாளர்களோ மக்களைப் பற்றிய கவலை அணுவளவுமின்றி ஊர் சுற்றிக்கொண்டு உல்லாச பவனி வந்துகொண்டிருந்தார்கள்.

ஆறவுன்ஸ் அரிசி-அதிலே பார்த்தால் கல்லும் மண்ணும்-பற்பல இடங்களில் அதுகூடக்கிடைக்காத பரிதாப நிலை-இந்த நிலையை மாற்ற ஏதும் செய்யாத காங்கிரஸ் மந்திரிகள்-இந்த நிலையிலே நாடு இருந்தது.

தங்களுக்கு உண்ண உணவும் கொடுக்காமல், உடுக்க உடையும் கொடுக்காமல், வாழ வழியும் காட்டிடாமல், தட்டிக் கேட்டால் துப்பாக்கிக் குண்டுகளைக் காட்டி குண்டாந்தடிகளைச் சுழற்றி, சிறைச்சாலை வாயில்களைத் திறந்து காட்டி, அடக்கு முறை ஆட்சி புரிந்துவந்த காங்கிரஸ் பாசிசத்தை எப்படியாவது ஒழித்துக்கட்டியே தீரவேண்டும் என்று பொதுமக்கள் சபதமெடுத்துக் கொண்டார்கள். அப்படி அவர்கள் சபதமெடுத்துக் கொண்டிருந்த நிலையிலேதான் பொதுத் தேர்தல் வந்தது.

பொதுத் தேர்தலிலே மக்கள் மன்றம் தன் இலட்சியமாகக் கொண்டிருந்த நோக்கமெல்லாம் எப்படியாவது காங்கிரஸ் ஆட்சியை மீண்டும் அதிகார பீடத்தை அண்டவொட்டாமல் விரட்டியடிக்கவேண்டும் என்பதுதான்.

இந்தக் காரணத்தால்தான், கனம் மாணிக்க வேலரே, மக்கள், போளூர் தொகுதியில், காங்கிரஸ் பிரதிநிதி தோழர் அண்ணாமலை செட்டியாரைத் தோற்கடித்துவிட்டு, காங்கிரசை எதிர்த்துநின்ற அபேட்சகராகிய தங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

பொதுத்தேர்தலிலே காங்கிரஸ் கட்சியை முறியடிப்பேன் என்று முழக்கமிட்டீர் நீர்.

காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளையெல்லாம் தூள்தூளாக்குவேன் என்று விரிவுரை ஆற்றினீர் நீர்.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஆகாவழிப் போக்குகளையெல்லாம் அலசி அலசிக் காட்டினீர் நீர்.

ஆகவேதான் பொதுமக்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

மாணிக்கவேலர் என்பதற்காக அல்ல—காங்கிரசை ஒழிக்க முன்வந்திருப்பவர் என்பதற்காகத்தான் மக்களின் ஓட்டுகள் தங்களுடைய பெட்டியில் குவிக்கப்பட்டன.

காங்கிரஸ் ஆட்சியின் கொடுங்கோல் தர்பாரில் சிக்குண்டு சிதைந்தார்கள் மக்கள். அந்தச் சிதைவிலிருந்து தங்களைக் காப்பாற்றவும், காங்கிரஸ் கொடுமைகளைத் தவிடுபொடியாக்கவும் யாராவது முன்வரமாட்டார்களா என்று ஆவலுடன் நாற்புறமும் நோக்கினார்கள் பொதுமக்கள். இதோ நான் வருகிறேன் காங்கிரஸ் ஒழிப்புப் பணிபுரிய என்று நீர் முன்வந்தீர் போளூர் தொகுதியில். ஆகவேதான், வெற்றி, தங்கள் பக்கம் வந்தது.

ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், காங்கிரஸ் பாசிசத்திற்குக் கல்லறை அமைப்பதற்குத்தான், போளூர் மக்கள், தங்களைக் கூப்பிட்டு சட்டசபைக்குச் செல்க என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். தாங்களும், ஆம்—நிச்சயம் அந்தப் பணிபுரிவேன் என்று சொல்லிவிட்டுத்தான் சட்டசபைக்குள் நுழைந்தீர்கள். ஆனால் நுழைந்தபிறகு, எந்தக் காங்கிரஸ் கட்சியை முறியடிப்பதாக முன்பு முழக்கமிட்டீர்களோ அதே காங்கிரஸ் அதே காங்கிரஸ் கட்சியுடன் ஆனந்தமாகக் கை குலுக்கிக் கொண்டு மகிழ்ச்சியுடன் உலவுகிறீர்கள். நியாயமா இது? நான் மட்டுமல்ல, போளூர் தொகுதிப் பொதுமக்கள் அத்தனைபேரும் கேட்கிறார்கள். கேட்காமல் இருப்பார்களா?

மக்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தது காங்கிரசை முறியடிக்க.

தாங்கள் இன்று செய்திடும் பணியோ காங்கிரசுக்கு லாலி பாடுவது.

தகுமா?

மக்கள் தங்களுக்கு வாக்குரிமைகளை அளித்தது தேசிய பாசிசத்தைத் தவிடுபொடியாக்க.

தாங்கள் இதுபோது புரிந்திடும் காரியமோ அந்தப் பாசிசத்துக்குப் பயந்து பணிந்து குற்றேவல் செய்துகொண்டிருப்பது.

முறையா?

கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றி வைப்பீர்கள் என்கிற நம்பிக்கையின் பேரில்தான் பொதுமக்கள் அவர்களுடைய பொன்னான ஆதரவைப் பூரிப்புடன் அளித்தார்கள் தங்களுக்கு.

ஆனால் தங்களோ அன்று கொடுத்தவாக்குறுதிக்கு நேர்மாறாக இன்று நடக்கிறீர்கள்—காங்கிரஸ் மந்திரிசபையில் இடமே பெற்றுவிட்டீர்கள்.

செய்யலாமா இப்படி?

பொதுமக்கள் அவர்களுடைய இருதயத்திலே தங்களுக்கு இடம் கொடுத்தார்கள். ஆனால் தாங்களோ அந்த இடத்தை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, காங்கிரஸ் மந்திரிசபையிலே இடம் தேடிக்கொண்டீர்கள்.

அறிவுடைமைதானா இது?

மந்திரிப் பதவி சிறியது. மக்களின் இருதயமே பெரியது. ஆனால் தங்கள் கண்களுக்கோ மக்கள் இருதயம் சிறியதாகவும் மந்திரிப் பதவியே பெரியதாகவும் தெரிகிறது.

தெரியலாமா அப்படி?

கனம் மாணிக்கவேலரே. காங்கிரசை எதிர்ப்பதற்காக மக்களால் அனுப்பப்பட்டவரே, இப்போது காங்கிரசை ஆதரிப்பதாக அமைந்துள்ள மந்திரிசபையில் இடம் பெற்றிருப்பவரே, தங்களுடைய இருதயத்தைத் தாங்களே கேட்டுப்பாருங்கள் நான் செய்துள்ள காரியம் நியாயமானதுதானா என்று.

அல்ல அல்ல என்று அது அழுத்தந்திருத்தமாகக் கூறும். நிச்சயமாகக் கூறும்.

இவ்வளவு எளிதிலும், இத்துணை விரைவிலும் பொதுமக்களின் நல்லாதரவை இழந்து அவர்களுடைய மாறாத வெறுப்புக்கு ஆளாகிவிட்டீரே என்பதை எண்ணுகிறபோது மிக மிக வருத்தமாகத்தான் இருக்கிறது. என்றாலும் என் செய்வது? ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் தங்களைப் போலவும் சிலர் இருக்கத்தானே செய்கிறார்கள்?

இனி, தங்களுக்கு அழகான பங்களா இருக்கும், அதைவிட அழகான மோட்டார் இருக்கும், கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க ஆட்கள் இருக்கும், உயர்தர அந்தஸ்தும் அந்தஸ்துக் கேற்ற வசதிகளும் தாராளமாக இருக்கும், ஆனால் ஒன்றுமட்டும் தான் தங்களுக்கு இராது. அதுதான், மக்களின் ஆதரவு.

இப்படிக்கு,

தங்களுடைய அடக்குமுறைக்கு
இனி ஆளாகக்கூடிய தோழன்,

'போர்வாள்'

# அமைத்துவிட்டார் மந்திரிசபை!

அன்பர் ஆச்சாரியார், அவருடைய மந்திரிசபையை அமைத்துவிட்டார்.

9-4-52 புதன்கிழமை இரவு, புதிய மந்திரிகளின் பெயர்களைக் கவர்னரிடம் சமர்ப்பித்து, கவர்னர் மூலமாக எல்லோருக்கும் அறிவித்துவிட்டார்.

ஆச்சாரியார் அமைத்துள்ள மந்திரிசபையில் முதலில் நம்முடைய கவனத்தைக் கவர்வது அதன் பிரதம மந்திரியாகிய ஆச்சாரியாரேதான்.

ஆச்சாரியார் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு எம். எல். ஏ.வாகி சட்டசபைக்குள் நுழைந்தவரல்ல.

கவர்னருடைய நாமினேஷன் மூலமாக மேல்சபைக்குள் கொண்டுவந்து நுழைக்கப்பட்டவர்.

பொதுமக்களுடைய நல்லாதரவைப் பெறாதவர்.

பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காகத் தேர்தலில் நிற்கவேண்டுமே என்கிற கவலையை இன்றைய தினம் வரையிலே கொள்ளாதவர்.

பொதுமக்களுடைய ஆதரவைப் பெறாமல் வெறும் நாமினேஷன் மூலமாகப் பிரதம மந்திரியாகப் பவனிவருவது ஜனநாயகப் பண்பாட்டிற்கே நேர் மாறானது என்னும் நற்கருத்தை இன்னமும் புரிந்துகொள்ளாதவர்.

இப்படிப்பட்டவர் அமைத்துள்ள இந்த மந்திரிசபையிலே மொத்தம் இருக்கும் மந்திரிகளின் எண்ணிக்கை 15.

இதுவரையில் சென்னை மாகாணத்தில் அமைந்திருந்த எந்த மந்திரிசபையிலும் இவ்வளவு அதிகப்படியான அமைச்சர்கள் இருந்ததே கிடையாது.

சென்னை மாகாணத்தின் வரலாற்றிலேயே இல்லாத ஓர் அதிசயம் இந்த எண்ணிக்கை.

ஜஸ்டிஸ் கட்சி இந்த மாகாணத்தை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் மூன்றே மூன்று பேர் தான் மந்திரிசபையில் இடம் பெற்றிருந்தனர்.

ஜஸ்டிஸ் கட்சி எந்த மாகாணத்தை ஆண்டுகொண்டிருந்ததோ அதே மாகாணத்தை ஆளுவதற்குத்தான் இப்போது இந்த அசோக சக்ரதாரிகள் காலத்தில் பதினைந்துபேர் தேவைப்படுகிறது.

பதினைந்துபேர் இருந்துபார்த்தால்தான் முடியக்கூடிய அளவுக்கு வேலை ஏராளமாக இருக்கிறதுபோலிருக்கிறது—அதனால் தான் அத்தனை மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வதற்குமில்லை.

இந்தப் பதினைந்து மந்திரிகளிலே ஏழெட்டுப் பேரைத் தவிர, ஏனையோருக்கெல்லாம் ஏதாவது ஒரு இலாகா இருந்தாகவேண்டுமே என்பதற்காக ஆச்சாரியார், மிகவும் சிரமப்பட்டு, ஏதேதோ சிறு சிறு இலாகாக்களைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறாரே தவிர; அந்தச் சிறு சிறு இலாகாக்களுக்கெல்லாம் தனித்தனி அமைச்சர்கள் தேவையே இல்லை.

எடுத்துக்காட்டாக, இடவசதிக் கட்டுப்பாட்டு இலாகா என்பதாக ஓர் இலாகா சிருஷ்டிக்கப்பட்டு, அந்த இலாகாவுக்கு இராமநாதபுரம் இராஜா மந்திரியாக்கப்பட்டிருக்கிறார். இடவசதிக் கட்டுப்பாட்டுக்கு என்று ஒரு தனி அமைச்சர் தேவையா?

தோழர் சஞ்சீவய்யா என்பவர் இடவசதி இலாகா அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இடவசதிக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கு இராமநாதபுரம் இராஜா நியமிக்கப்பட்டிருக்கிற போது இடவசதி இலாகா என்று தனியாக ஓர் இலாகாவும் அதற்கு ஓர் அமைச்சரும் எதற்காக?

இடவசதிக்கு ஓர் அமைச்சர்! இடவசதிக் கட்டுப்பாட்டுக்கு மற்றோர் அமைச்சர்! அவசியமா?

அவசியமற்ற இலாகாக்கள் பல தனித்தனியாக உருவாக்கப்பட்டு அவற்றிற்கெல்லாம் தனித்தனி அமைச்சர்களை நியமித்திருப்பது ஆச்சாரியார் மந்திரிசபையில் உள்ள ஒரு சிறப்பான அம்சம்.

இந்த மந்திரிசபையின் மற்றொரு சிறந்த அம்சம், ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்று பேரே உள்ள பார்ப்பன வகுப்புக்கு நூற்றுக்கு இருபது வீதம் மந்திரி பதவிகளை வழங்கியிருப்பது.

ஜனத்தொகையில் நூற்றுக்குப் பதினைந்து பேர் உள்ள ஆதித்திராவிட வகுப்புக்கு மந்திரிசபையில் ஒரே ஒரு இடம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்றுபேர் மட்டுமே உள்ள பார்ப்பன இனத்தவருக்கு மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எந்த மந்திரிசபையிலும் முதலமைச்சர் பதவி, நிதி அமைச்சர் பதவி, போலீஸ் அமைச்சர் பதவி இவைகள்தான் முக்கியமானவை.

ஆச்சாரியார் மந்திரிசபையில் இந்த மூன்று பதவிகளும் பார்ப்

பன இனத்தவருக்கே ஒதுக்கப் பட்டிருக்கின்றன.

சென்ற சில ஆண்டுகளாக நம் மாகாணத்தின் உணவு நிலைமை மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகி யிருக்கும் காரணத்தால், உணவு அமைச்சர் பதவியும், இன்றைய நிலையில் மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக ஆகிவிடுகிறது.

இந்தப்பதவியும் ஆச்சாரியார் மந்திரிசபையில் பார்ப்பன இனத்தவருக்கே வழங்கப்பட்டிருக்கிறது.

பார்ப்பன இனத்தவருக்கு அளிக்கப்பட்டுள்ள மந்திரி பதவி எண்ணிக்கையும் அதிகம். அந்தப்பதவிகளின் அந்தஸ்தும் மிக முக்யமானது.

ஒரு சிறு கூட்டத்தவராகிய பார்ப்பன இனத்தவருக்கு மூன்று மந்திரிபதவிகளை அளித்துள்ள ஆச்சாரியார், முஸ்லிம் சமுதாயத்திற்கும், கிறிஸ்தவ சமுதாயத்திற்கும், ஆங்கிலோ இந்திய சமுதாயத்திற்கும் ஒரு இடம்கூட ஒதுக்கவில்லை.

மைனாரிட்டி சமுதாயங்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டவேண்டியது காங்கிரஸ் கட்சியின் நீங்காத கடமை என்று காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு அடிக்கடி கூறிவருகிறார்.

ஆனால் ஆச்சாரியாரின் மந்திரி சபையிலோ, இஸ்லாமிய இனத்தவரும்கிறிஸ்தவசமுதாயத்தினரும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர்.

மைனாரிட்டி சமுதாயங்களைப் புறக்கணித்ததோடு நிற்கவில்லை ஆச்சாரியார், மாதர் குலத்தவரையும் முற்றிலும் மறந்துவிட்டார். அவர் அமைத்துள்ள மந்திரிசபையில் பெண்கள் சமுதாயத்திற்கு ஒரே ஒரு இடம் கூட தரப்படவில்லை.

எந்தெந்த மந்திரிகளுக்கு எந்தெந்த இலாகாக்களை ஒதுக்கியிருக்கிறார் ஆச்சாரியார் என்பதை ஊன்றிக் கவனித்தால் அது மிகமிக வேடிக்கையாக இருக்கும்.

டாக்டர் கிருஷ்ணாராவ், ஆச்சாரியாருடைய மந்திரிசபையில் இருப்பவர்களில் ஒருவர். அவர் நீண்டகாலமாக டாக்டர் தொழில் புரிந்துவருபவர். அந்தத் துறையில் ஆழ்ந்த அனுபவமும் சிறந்த பயிற்சியும் தேர்ந்த அறிவும் படைத்தவர். வைத்திய இலாகாவும் சுகாதார இலாகாவும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் என்றுதானே நாம் எண்ணுவோம்?

ஆனால் ஆச்சாரியார் என்ன செய்திருக்கிறார் தெரியுமோ? டாக்டர் கிருஷ்ணாராவுக்கு முன்பின் அறிமுகமில்லாத தொழில் இலாகா, மோட்டார் போக்குவரத்து இலாகா, ரெயில்வே—தபால்—தந்தி இலாக்காக்களை ஒப்படைத்திருக்கிறார்.

தோழர் ஏ. பி. ஷெட்டி, விவசாயத் துறையில் பயிற்சியும் அனுபவமும் உடையவர். ஏற்கெனவே அந்தத் துறையில் அமைச்சராகவும் இருந்தவர். விவசாய இலாகா அவரிடம் ஒப்படைக்கப் படுவதுதான் பொருத்தமான காரியமாகும். ஆனால் ஆச்சாரியாரோ, தோழர் ஷெட்டிக்குச் சிறிதும் அனுபவமில்லாத வைத்திய இலாகாவை அவருக்கென்று தேர்ந்தெடுத்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல வேடிக்கை! வீட்டு நெருக்கடி என்றால் என்ன என்பதையே அறிய முடியாத இராஜபோக வாழ்வில் உல்லாச பவனி வந்து கொண்டிருக்கும் இராமநாதபுரம் இராஜாவை வீட்டுவசதிக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கு அமைச்சராக்கி யிருக்கிறார் தோழர் ஆச்சாரியார்.

எந்தெந்த மந்திரிகளுக்கு எந்தெந்த இலாக்காக்களில் துளியும் அனுபவம் இல்லையோ அந்தந்த மந்திரிகளாகத் தேடிப் பார்த்து அந்தந்த இலாக்காக்களை ஒப்படைத்திருக்கிறார் அவர்.

வேடிக்கையாக இருக்கிறது ஆச்சாரியாரின் இந்தச் செயல். ஆனால் இதனால் வேதனை அல்லவா ஏற்படும் மக்களுக்கு? விஷயம் தெரியாத மந்திரிகளிடம் அவர்களால் புரிந்து கொள்ள முடியாத துறைகளை ஒப்படைப்பதால் குழப்பமும் வேதனையும்தானே நாட்டில் நடமாட வசதி ஏற்படும்?

எப்படியோ ஒருவிதமாக ஆச்சாரியார் தம்முடைய மந்திரி சபையை அமைத்துவிட்டார்.

இந்த மந்திரிசபை எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பது தான் இப்போதுள்ள கேள்வி.

பொத்த வாக்காளர்களிலே மூன்றில் இரண்டு பங்கு பேர் காங்கிரஸ் மந்திரிசபை அமையக்கூடாது என்று தீர்ப்பளித்து விட்டிருக்கிறார்கள்.

சட்டசபையில் உள்ள 375 தொகுதிகளில் 223 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியைப் படு தோல்வி அடையச்செய்திருக்கிறார்கள் பொதுமக்கள்.

ஆகவே பொதுமக்கள் இந்த மந்திரி சபையை விரும்பவில்லை என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

பொது மக்களால் வெறுக்கப்படுகிற ஒரு மந்திரிசபை—பொதுமக்களுடைய ஜனநாயகத் தீர்ப்பை மதிக்காமல் உருவாக்கப்பட்டிருக்கிற ஒரு மந்திரிசபை—பொதுமக்களுடைய ஓட்டுகளைப்பற்றிய கவலையே அற்ற ஒரு நாமினேஷன் பிரதமரைத் தன் தலைவராகக்கொண்ட ஒரு மந்திரிசபை எப்படி நீடிக்க முடியும் நீண்டகாலத்திற்கு? அப்படி நீடிக்க முடியுமானால் இந்த நாட்டை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்வதில்தான் பொருள் என்ன இருக்க முடியும்?

# நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!

திண்ணன் என்றோர் வேடன் இருந்தானாம்!

அவனுக்குப் பாதிமதிநாதனும் பரமசிவனிடம் அளவற்ற பக்தியாம்!

வேடன் ஒரு நாள் வழக்கம் போலக் காட்டு வழியாக வேட்டையாடச் சென்றானாம்!

சென்றபோது, வழியிலே, ஓரிடத்திலே, பார்வதி நாதனின் சிலையொன்று இருப்பதை கண்டானாம்!

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் சிலையைக் கண்டதும் ஓடோடிச் சென்றானாம் விழுந்து வணங்க!

அருகே சென்றதும், என்ன ஆச்சரியம், சிவபிரான் சிலையின் ஒரு கண்ணிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டானாம்!

கண்டதும் கடுந்துயர் கொண்டு, என் அப்பன் திருநீலகண்டனின் கண்ணுக்கே பழுது வந்தது என்று வாய்விட்டுக் கூறி வருந்தி, ஏதேதோ பச்சிலைகளை வைத்துக் கட்டி இறைவனின் கண்ணிலிருந்து வடியும் இரத்தத்தை நிறுத்தப் பார்த்தானாம்.

என்ன செய்தும் கண்ணிலிருந்து கொட்டிய குருதி கொட்டியபடியே இருந்ததாம்.

சிவபிரானின் கண் சிதைந்து போனதைக் கண்ட பிறகும் எனக்கெதற்கு கண் என்று கூறிக் கொண்டே, தன்னுடைய ஒரு கண்ணைப் பெயர்த்து எடுத்து, குருதியைச் சிந்திக்கொண்டிருந்த சிவனின் கண் இருந்த இடத்தில் அப்பினானாம்.

அப்பியதுதான் தாமதம், சிலையின் கண்ணிலிருந்து வடிந்த குருதி நின்றுவிட்டதாம்.

ஆஹா! தன்யனானேன்! என்று ஆனந்தக் கூத்தாடினானாம் வேடன்.

ஆனால் உடனே சிலையின் மற்றொரு கண்ணிலிருந்து குருதி வடியத் தொடங்கியதாம்.

சிறிதும் தாமதமின்றி, வேடன், தன்னுடைய மற்றொரு கண்ணையும் பெயர்த்து எடுத்து முன்போலவே இந்தக் கண்ணுக்கும் அப்பினால், இந்தக் கண்ணின் பழுதும் தீர்ந்து போகும் என்று எண்ணி, தன் இரண்டாவது கண்ணையும் தோண்டி எடுக்கக் கைகளைக் கண்ணருகே கொண்டுபோனானாம்.

கொண்டு போனதுதான் தாமதம், "நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!" என்று கூறிய வண்ணம், எல்லாம் வல்ல எம்பிரான், தம் பாரியை சமேதராக நந்திமீதமர்ந்தபடி, வேடன் கண் முன்னே தோன்றி காட்சி அளித்தாராம்.

"பக்தா! உன்னை மெச்சினோம்! உன் பக்தியின் ஆழம் எவ்வளவு என்பதைக் கண்டறியவே இச்சோதனையில் இறங்கினோம்!" என்று திருவாய்மலர்ந்தருளினாராம் திருநீலகண்டனார்.

ஆண்டவன் அருளால் வேடனின் இரு கண்களும் எப்போதும் போலப் பார்வைச் சக்தியைப் பெற்றுவிட்டனவாம்.

கண்ணை எடுத்து அப்பிய காரணத்தால் அந்த வேடனுக்குக் கண்ணப்பன் என்று பெயரும் ஏற்பட்டு விட்டதாம்.

பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதில் அசகாய சூரர்களாகிய நம் நாட்டுப் புராணீகர்கள் இப்படி ஒரு கதையைக் கூறுவது உண்டு.

கற்சிலையின் கண்களிலிருந்து என்றாவது இரத்தம் வடியுமா?

அப்படியே வடிவதாக இருந்தாலும் அதற்காக ஒரு மனிதன் தன்னுடைய கண்களைத் தோண்டி எடுத்துக் கற்சிலையின் கண்ணுடன் அப்புவதென்பது பைத்தியக்காரத்தனமல்லவா?

அப்படியே ஒருவன் செய்கிறான் என்று வைத்துக்கொண்டாலும் அத்தகையவன் செயலைக் கண்டு ஆண்டவன் பெருமகிழ்ச்சி அடைந்தார் என்று எழுதுவது பெரும் பேதைமை அல்லவா?

இந்தக் கேள்விகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பதில்லை புராணீகர்கள்.

எதைச் சொன்னாலும் நம்புகின்ற குணம் படைத்த ஏமாளிகள் ஏராளமாக இருக்கும்போது புராணீகர்கள் நாக்கில் புளுகு மூட்டைகள் உருள்வதிலே ஆச்சரியம் ஏது?

இட்டுக் கட்டிக் கூறிய வேடனார் கதையிலே கூட, நம் புராணீகர்கள், பழுதாகிப்போன கற்சிலையின் கண்களைக் குணப்படுத்துவது எப்படி என்பதிலேதான் அக்கறை காட்டியிருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே கண்ணிழந்து தவிக்கும் மனிதர்களுடைய கண்களைப் பற்றித் துளியளவும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

கண்ணப்பனும் தன் கண்ணைக் கற்சிலையின் கண்களுக்குத்தான் அப்பியதாகக் கதை கூறுகிறதே தவிர, கண் பார்வை அற்ற மனிதர்களின் கண்களுக்கு அப்பியதாகப் புராணம் இல்லை.

ஏனெனில் நம் நாட்டு மக்கள் சிலையைப் போற்ற அறிந்திருந்தனரே தவிர மனிதர்களைக் காப்பாற்றத் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் மேல்நாட்டு அறிஞர்கள் போற்றி வளர்க்கும் விஞ்ஞானம், பார்வை இழந்துபோன மனிதர்களின் கண்பார்வையை எப்படி மீட்பது என்பதிலே நல்ல ஆராய்ச்சி செய்து, அதிலே சிறந்த வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

நாம் கண்டுபிடித்திருக்கிற புராணம் கற்சிலையின் கண்களிலே வடியும் இரத்தத்தை எப்படி நிறுத்துவது என்பதைத்தான் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

ஆனால் மேல்நாட்டார் கண்டுபிடித்துள்ள விஞ்ஞானமோ, கண் பார்வை இழந்தவர்களுக்குப் பார்வைச் சக்தியை எப்படி மீண்டும் வரவழைத்துக் கொடுப்பது என்பதை ஆராய்ந்தறிந்து கூறுகிறது.

இறந்துபோனவர்களுடைய கண்களை அவர்கள் இறந்த இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் பெயர்த்து எடுத்து, கண்ணிழந்தவர்களுக்குப் பொருத்திவைத்துத் தகுந்த முறையில் ஆபரேஷன் செய்தால், கண்ணிழந்தவர்கள்

கண் பார்வை பெற்றுவிடுகிறார்களாம்.

மேல்நாட்டார் போற்றிவளர்க்கும் விஞ்ஞானம் பார்வை இழந்தவர்களுக்குப் பார்வை அளிக்க இப்படி ஓர் அபூர்வமான முறையை நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகு கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறது.

மேல்நாட்டில்தான் இத்தகைய அற்புதமான ஆபரேஷன்களையெல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடிக்கமுடியும் — இங்கே யார் இருக்கிறார்கள் இத்தகைய ஆபரேஷன்களைச் செய்ய? — ஏது இங்கே அவ்வளவு திறமையுள்ள டாக்டர்கள் என்று சிலர் கருதக்கூடும்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா?

சென்ற ஒரே ஒரு ஆண்டில் மட்டும், இத்தகைய ஆபரேஷன்கள் சுமார் ஐம்பதுக்குமேல் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருக்கின்றன —சென்னையிலேயே!

சென்னை எழும்பூரில் உள்ள கண் ஆஸ்பத்திரியில், அந்த ஆஸ்பத்திரி சூப்ரண்டு டாக்டர் மூத்தையாவும் அவருடைய சகாக்களும் இந்த ஆபரேஷன்களை மிகத் திறமையாக நடத்தியிருக்கிறார்கள்.

1948ல்தான் சென்னையில் முதன்முதலாக இந்த ஆபரேஷன் செய்யப்பட்டதாம். அப்படிச் செய்யப்பட்டதால், சென்னை பெரம்பூர் வொர்க் ஷாப்பில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி கண் பார்வை பெற்றாராம்.

சென்னை ஆஸ்பத்திரியில் அனாதைகளாக இறப்பவர்களின் உடலை யாரும் வந்து கேட்காமலிருந்தால் அந்த ஆஸ்பத்திரி அதிகாரிகள் உடனே கண்ணாஸ்பத்திரிக்குத் தெரிவிக்கின்றனராம்.

செய்தி கிடைத்தது கண்ணாஸ்பத்திரி சீனியர் சர்ஜன், அச் சவத்தின் கண்களைப்பெயர்த்து எடுத்து, கண்ணிழந்தவர்களுக்குப் பொருத்திவைத்து ஆபரேஷன் செய்கிறாராம்.

கண்ணிழந்தவர்களின் ஜாபிதா வரிசைக்கிரமமாக எழுதிவைக்கப்பட்டிருக்கிறதாம்.

அந்த வரிசைக் கிரமப்படி இந்த ஆபரேஷன் செய்யப்படுகிறதாம்.

நான் இதழ்கள் எல்லாவற்றிலும் இந்தச்செய்தி வெளிவந்திருக்கிறது இந்த வாரம்.

விஞ்ஞானம், மனித சமுதாயத்திற்குப் பல மகத்தான நன்மைகளைச் செய்திருக்கிறது.

அந்த எண்ணற்ற நன்மைகளின் பட்டியலிலே, கண்ணிழந்தவர்களுக்குப் பார்வையை அளிக்கும் இந்த அற்புதமான நன்மையும் ஒன்று.

நாம் கண்டுபிடித்துள்ள புராணங்கள், கற்சிலையின் கண்கள் பழுதுபட்டதைக் கண்டதும் தன் கண்களைப் பெயர்த்தெடுத்து அப்பிய பித்தன் கதையைத்தான் நித்தம்நித்தம் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் மேல்நாட்டு அறிஞர்கள் உருவாக்கியுள்ள விஞ்ஞானமோ, கண் இழந்தவர்களுக்குக் கண்பார்வையை அளிக்கும் அற்புதமான முறையை ஆராய்ந்தறிந்து கூறுகிறது.

நமக்குத் தேவையானது எது?

புராணம்புகட்டும்பாதையா? அல்லது விஞ்ஞானம்வகுக்கும்வழியா?

எது தேவை நமக்கு?

கண்ணப்பன் கதையா? அல்லது கண்ணாஸ்பத்திரி சாலையா?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு இரண்டு மூன்று எலிகள், தைரியமாகவே பூனையின் அருகே சென்று சிறிது நேரம் இருந்துவிட்டு வந்தன. அப்போதும், பூனை, ஒன்றுமே தெரியாதது போல கண்களை மூடிக்கொண்டே இருந்தது.

பிறகு கேட்க வேண்டுமோ? இருபது முப்பது என்று எலிகள் பூனையைச் சுற்றியும், பூனையின் எதிரிலும், ஏன், பூனையின் உடல் மீதும் கூட ஓடி ஆடி விளையாடலாயின.

ஐந்து நிமிஷ நேரம் 'தவசிரேஷ்டர்' மோனநிலையிலேயே இருந்தார்.

எலிகளுக்குக் கொஞ்சநஞ்சம் இருந்த பயமும் தீர்ந்துவிட்டது. அவர் அருகிலேயே தொடர்ந்து இருக்கத் தொடங்கின.

அவ்வளவுதான். திடீரென்று பாய்ந்தார் பூனை யார். மடமடவென்று எலிகளை விழுங்கினார்.

ஸ்ரீலஸ்ரீ பூனையாரின் தவக்கோலம், தங்களை ஏமாற்றுவதற்காக அவர் கொண்ட வெறும் வேஷம் என்பது, பிறகுதான், மிச்சமிருந்த பூனைகளுக்குப் புரியலாயிற்று............"

சேரன், கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நான் கேட்டேன், "அந்த உருத்திராட்சப் பூனைபோல ஆச்சாரியாரும், ஏமாந்த அந்த எலிகள் போல காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் இருக்கிறார்கள் என்பது உன் கருத்தோ?"

"செச்சே! ஆச்சாரியார் எவ்வளவு பெரிய மனிதர்! அவரைப் போய் நான் உருத்திராட்சப் பூனை என்பேனா? சும்மா பொழுது போக்குக்காகக் கதை சொன்னேன்! அவ்வளவுதான்! அது இருக்கட்டும்! ஆச்சாரியார், இந்த ஓராண்டுக் காலமாகத் துறவியாக நடித்த நடிப்பு இருக்கிறதே அந்தக் கலை அபூர்வமாக இல்லை?"

"அபூர்வமாக மட்டுமா? அற்புதமாக இருக்கிறது! ஆச்சர்யமானதாகவும் இருக்கிறது. இந்த கே. ஆர். ராமசாமியைப் போய் சிலர் நடிப்புப் புலவர் என்கிறார்களே, அது சுத்தப் பைத்தியக்காரத்தனம்! என்னைக் கேட்டால் அந்தப் பட்டத்தை ஆச்சாரியாருக்குத்தான் தர வேண்டும் என்பேன்! அரசியல் மேடையில் . துறவி வேடத்தில் தோன்றி அவர் நடித்த நடிப்பு இருக்கிறதே, அது,"பலே ஜோர்! பலே ஜோர்!"

"நீயே சொல் பாண்டியா! ஆச்சாரியாருடைய துறவு வேடம், அவருக்கு ஒரு பிரதமர் பதவியைக் கொடுக்கிறபோது, நான் துறவுக்கோலம் பூண்டால் எனக்கு ஒரு கமிஷனர் வேலைகூடவா கிடைக்காது?"

சேரன் கேட்கிறான் இது போல! எப்படிக் கிடைக்கும் சேரனுக்கு? சேரன் மார்பிலே தான் அந்தக் "குறுக்கு நூல்" கிடையாதே!!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சரியான குறுக்குப்பாதை என்று அவர் கருதியதே என்பதையும், நாட்டு மக்கள் அனைவருக்கும் மிகத் தெளிவாக விளக்கிவிட்டது—டாக்டர் ராஜனை, ஆச்சாரியார் மந்திரி நாற்காலியில் அமர்த்திய சம்பவம்.

தனக்கு ஏதாவது பெரிய பதவியோ பட்டமோ அந்தஸ்தோ அதிகாரமோ வேண்டும் என்று ஆச்சாரியார் கருதிய போதெல்லாம் ஒரு துறவு நாடகத்தை மிகத் திறமையாக நடத்திக் காட்டுவது அவருடைய நீண்ட கால வழக்கம்.

அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால், 1936 ல் அவர் நடத்திக்காட்டியதைப் போலவே வேறு பற்பல சமயங்களிலும் அவர் துறவு நாடகம் ஆடியிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்துவிடும்.

அவர் துறவுக் கோலம் பூண்பதாக அறிவிக்கும் ஒவ்வொரு நேரத்திலும், அடுத்தாற்போல ஏதோ ஒரு பெரிய பதவியைப் பெறுவதற்காக அவர் திரை மறைவில் சூழ்ச்சி செய்யத் தொடங்கியிருக்கிறார்.

அவருடைய ஒவ்வொரு துறவுப் படலத்தின் கடைசி வாக்கியமும் அவர் ஏதோ ஒரு பெரும் பதவியில் அமர்ந்தார் என்கிற அதே வாசகமாகத்தான் இருக்கும்.

பதவி பெறுவதற்காகத் துறவு நாடகங்கள் நடத்துவது என்பது அவருடைய அரசியல் வாழ்க்கையிலே உள்ள ஒரு பழைய தொடர்கதை. அந்தப் பழைய தொடர்கதையின் புதியதோர் அத்தியாயம் தான், பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் என்று பாடிக்கொண்டிருந்தவர் திடீரென்று நம் மாகாணத்தின் பிரதம மந்திரியாகியிருக்கிற இன்றைய நிகழ்ச்சி!

---


## போர்வாள்

### சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6—8—0 |
| 6 மாதம் | ரூ. 3—4—0 |

**போர்வாள் அலுவலகம்**

131, பிராட்வே, சென்னை-1.



# சிறந்த சிந்தனைக் கருவூலங்கள்!

### இராதாமணாளன்

| | | |
|---|---|---|
| மனப்புயல் | 2 | 0 |
| மூடுராணி | 1 | 0 |
| பாலைவனம் | 0 | 10 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| துளிதேன் | 0 | 8 |
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| கந்தலீலா | 0 | 8 |
| மதம் அவசியமா | 0 | 3 |
| அய்யோ கடவுளே | 0 | 3 |

### இளஞ்செழியன்

| | | |
|---|---|---|
| இந்திய அரசியல் திட்டம் | 2 | 0 |
| சரிந்த சாம்ராஜ்யம் | 0 | 10 |

### அன்பழகன்

| | | |
|---|---|---|
| அழகுராணி | 1 | 4 |
| வகுப்புரிமைப் போராட்டம் | 1 | 12 |

### கருணாநிதி

| | | |
|---|---|---|
| தூக்குமேடை | 1 | 8 |
| சுழல் விளக்கு | 1 | 0 |
| களத்தில் கருணாநிதி | 1 | 0 |
| பெருமூச்சு | 1 | 0 |
| வாழமுடியாதவர்கள் | 0 | 12 |
| கருணாநிதி வர்ணனைகள் | 0 | 10 |
| இதயபேரிகை | 0 | 8 |
| இனமுழக்கம் | 0 | 8 |
| உணர்ச்சி மாலை | 0 | 8 |
| துடிக்கும் இளமை | 0 | 6 |
| போர் முழக்கம் | 0 | 4 |
| கலைக் களஞ்சியம் கருணாநிதி | 0 | 4 |
| திராவிட சம்பத்து | 0 | 3 |
| கருணாநிதி கருத்துரைகள் | 0 | 3 |
| கயிற்றில் தொங்கிய கணபதி | 0 | 3 |
| தலைமை உரை | 0 | 2 |

### தில்லை வில்லாளன்

| | | |
|---|---|---|
| துரோகி | 2 | 0 |
| தங்கத் தாமரை | 1 | 0 |
| மணப்போர் | 1 | 0 |

### ஆசைத்தம்பி

| | | |
|---|---|---|
| அன்பழகன் ஆட்சி | 1 | 4 |
| விந்திய வீரன் | 1 | 0 |
| கொலைகாரி | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | 0 | 12 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 |
| தியாகச் சுடர் | 0 | 12 |
| நினைவுச் சுழல் | 0 | 12 |
| பிணங்கள் | 0 | 12 |
| வரண்ட வாழ்க்கை | 0 | 8 |
| மக்கள் சக்தி | 0 | 6 |
| ஆசைத்தம்பி அறைகூவல் | 0 | 3 |

### டி. கே. சீனிவாசன்

| | | |
|---|---|---|
| எல்லைக்கப்பால் | 0 | 8 |
| துன்பக் கதை | 0 | 8 |

### அரங்கண்ணல்

| | | |
|---|---|---|
| வியர்வை விருந்து | 0 | 6 |
| பேசும் புறாக்கள் | 0 | 8 |

### டாக்டர் மு. வரதராசன்

| | | |
|---|---|---|
| மணச்சான்று | 1 | 12 |
| பச்சையப்பர் | 1 | 4 |
| பெற்றமனம் | 4 | 4 |
| மலர் விழி | 3 | 4 |
| கி. பி. 2000 | 2 | 0 |
| கவிஞர் பெர்னட்ஷா | 2 | 0 |
| கவிதாகூர் | 1 | 4 |
| காந்தி அண்ணல் | 1 | 0 |
| அறமும் அரசியலும் | 1 | 12 |
| அரசியல் அலைகள் | 1 | 8 |
| யான் கண்ட இலங்கை | 1 | 8 |
| திருக்குறள் தெளிவுரை | 1 | 4 |

### தணலன்

| | | |
|---|---|---|
| கானகத்திலே காதல் | 1 | 12 |
| அழகுநிலா | 1 | 0 |
| செல்வக் குமாரி | 1 | 0 |
| நடிகன் | 0 | 8 |
| அன்னியன் | 0 | 8 |
| லீலா ராணி | 0 | 8 |
| அந்த இரவு | 0 | 8 |
| வாழும் உரிமை | 0 | 3 |

### செழியன்

| | | |
|---|---|---|
| கல்வி நீரோடை | 0 | 6 |
| ஏழை எரிமலை | 0 | 8 |

### ந. சி. கந்தையா

| | | |
|---|---|---|
| திராவிட இந்தியா | 1 | 0 |
| திராவிடம் என்றால் என்ன | 0 | 6 |
| ஆரியத்தால் விளைந்தகேடு | 0 | 6 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 0 | 8 |
| புரோகிதர் ஆட்சி | 0 | 8 |

### நாரண துரைக்கண்ணன்

| | | |
|---|---|---|
| வேனில் வந்தது | 0 | 6 |
| சந்தேகம் | 0 | 6 |
| அம்மான் மனைவி | 0 | 6 |
| பாடகியின் மகள் | 0 | 4 |
| கவிஞனின் காதல் | 0 | 4 |

**பகுத்தறிவுப் பாசறை**

131, பிராட்வே, சென்னை.


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)